# அகத்தியர் அருளிய அறுபத்தி நாலு சித்துக்கள்

(அகத்தியரின் "அகத்தியர் கலைஞானம் 1200" என்கிற நூலில் இருந்து தொகுக்கப் பட்டது.)

தொகுத்தவர் : தோழி

## என்னுரை

கடந்த ஒன்பது மாதங்களில் எனது நான்காவது முயற்சி இந்த மின் நூல். இந்த முறை எனது வணக்கத்துக்குறிய குருநாதர் அகத்தியரின் மேலான அனுமதி மற்றும் ஆசியுடன் அவரது "அகத்தியர் கலைஞானம் 1200" என்கிற நூலில் இடம் பெற்றிருக்கும் அறுபத்தி நாலு சித்துக்களை மட்டும் தனியே தொகுத்து மின் நூலாக ஆக்கியிருக்கிறேன்.

அகத்தியரின் பாடல்களுக்கு விளக்கம் எழுதும் அளவுக்கு எனக்கு தேர்ச்சி இல்லாவிடினும், கிடைத்த நேரத்தில் என்னால் இயன்றவரையில் பாடல்களுக்கான விளக்கத்தினை எழுதியிருக்கிறேன். இந்த சிறியவளின் முயற்சியில் பிழையேதும் இருப்பின் அதனை பொறுத்து, பிழைகளை திருத்திடுமாறு பணிவுடன் வேண்டுகிறேன்.

முதல் வாசிப்பில் இதில் உள்ள தகவல்களும், வழிமுறைகளும் நம்மை ஆச்சர்யத்தின் விளிம்புகளில் நிறுத்தி, இந்த சித்துக்களின் மீதான சந்தேகத்தை படர வைத்திடும். மீள் வாசிப்புகள் இவற்றின் சாத்திய, அசாத்தியங்களின் மீதான ஆர்வத்தினையும், கேள்விகளையும் நமக்குள் தூண்டி விடும் என்பது மட்டும் உறுதி.

இந்த மின் நூலின் விவரங்கள் மீது தீவிரமான ஆய்வுகள் நடத்தப் பட்டால் பல அரிய விவரங்களை நாம் வெளிக் கொண்டுவர முடியும் என நம்புகிறேன். அத்தகைய ஒரு முயற்சியின் முதல் படியாக இந்த நூலினை கருதிட வேண்டுகிறேன்.

இந்த முயற்சியில் தொடர்ந்து என்னை ஊக்கப் படுத்தி ஆலோசனைகள் கூறி, வழி நடத்திய அத்தனை நண்பர்களுக்கும் எனது நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன். இந்த அன்பும், அக்கறையும், ஆலோசனைகள் என்றும் தொடர, எல்லாம் வல்ல குருவடி பணிந்து வேண்டி, இந்த மின் நூலினை உங்கள் பார்வைக்கு சமர்ப்பிக்கிறேன்.

என்றும் நட்புடன்

தோழி
29 ஒக்டோபர் 2010

**ஆனந்தப் பரிபூரண ஆதிபாதம்**
**என் அய்யன் குருவி பாதம்**
**எமையாழும் கணேசன் பாதம்**
**போற்றுகிறேன் போற்றி போற்றி**

அகத்தியர் தனது மாணவரான புலத்தியருக்கு கூறுவதாக இந்த பாடல்கள் யாவும் அமையப் பெற்றிருக்கிறது. நூலின் துவக்கத்தில் அகத்தியர் பின் வருமாறு புலத்தியரிடம் கூறுகிறார்.

"நீதான் சித்தாடுகின்ற வகையைக் கேளு
நீள்புவியில் இக்கருவைச் சொன்னாயானால்
கோதறவே வாதத்தால் பிடிக்கப் பட்டு
கொடும் பிணிகள் சூழ்ந்து கொடுமையாகி
வேதாளமாகி பூதமாய்ப் போவாய்
வேதாந்த சத்தியமாய் நின்றாயானால்
தலைவனாய் உலகில்லுள்ளோர்க் காவாயப்பா
தண்மையுள்ள புலத்தியனே கேளுகேளே!"

மென்மையான மனத்தைக் கொண்ட என் மாணவனே!, புலத்தியனே!, சித்தாடுவதை சொல்கிறேன் கேள், பூமியில் உள்ளவர்களுக்கு இதை நீ சொன்னால் வாதம் முதலான பல நோய்களினால் பீடிக்கப் பட்டு, வேதாளமாகி, பூதமாகி போவாய், வேதாந்த சத்தியத்தைக் கடைப்பிடித்து, இந்த சித்துக்களைக் கொண்டு உலகிலுள்ளவர்களுக்கு எல்லாம் நீ தலைவனாகலாம் என்கிறார் அகத்தியர்.

அகத்தியர் அருளிய அறுபத்திநாலு சித்துக்களை விரிவாய் பார்ப்பதற்கு முன்னர் அந்த சித்துக்களின் பெயர்களை அகத்தியரின் வரிகளில் தெரிந்து கொள்ளுவோம்.

<u>அறுபத்து நாலு சித்து</u>

சித்தான அறுபத்து நாலுக்கும் பேர்
        செப்புகிறேன் புலத்தியனே தெளிந்து கேளு
முத்தான பிரவதிக சித்து வொன்று
        மூர்க்கமுள்ள இதமிகிதச சித்துவொன்று
சுத்தான சுக்கிலத்தின் சித்துவொன்று
        சுகமான பிரமகுலச் சித்துவொன்று
பத்தான பிறையதிகச் சித்துவொன்று
        பாங்கான அங்கிசத்தின் சித்துவொன்றாச்சே.

ஒன்றான பெண்மயம்மாம் சித்துவொன்று
        வொடுங்காத பலமூலச் சித்துவொன்று
பன்றான ஈசர்குலச் சித்துவொன்று
        பராபரமாம் தாதுவெனும் சித்துவொன்று
குன்றான அசுரமெனும் சித்துவொன்று
        குறையாத தானியமாம் சித்துவொன்று
சென்றண்ட பிரமாதிச் சித்துவொன்று
        திறமான அனுமாதிச் சித்துவொன்றாச்சே.

ஆச்சப்பா விகுர்தகுலச் சித்துவொன்று
        அடங்காத சித்திரமாம் சித்துவொன்று
மூச்சப்பா சிவநிதியாம் சித்துவொன்று
        முறையான அருணவலுச் சித்துவொன்று
காச்சப்பா பகுதியெனும் சித்துவொன்று
        கரைகாணா அதிரூபச் சித்துவொன்று
பாச்சப்பா சருவகுலச் சித்துவொன்று
        பண்பான மோகினியாஞ் சித்துமாமே.

ஆமப்பா விநோதமாயச் சித்துவொன்று
அசையாத விகுர்தியெனும் சித்துவொன்று
நாமப்பா காரூபச் சித்துவொன்று
நாதமெனும் அன்பு நிலைச் சித்துவொன்று
காமப்பால் விசயமெனும் சித்துவொன்று
கருணை பெறும் செயரூபச் சித்துவொன்று
தாமப்பா மதன சித்துமொன்று
தருகாத தும்பிவளைச் சித்தொன்றாமே.

சித்தான பரிநகுலச் சித்துவொன்று
திறமான நரிபரியாம் சித்துவொன்று
வித்தான வகாரமயச் சித்துவொன்று
விதமான சந்தவிதச் சித்துவொன்று
சுத்தமான தாம்பிரமாஞ் சித்துவொன்று
தொலையாத சலபேதிச் சித்துவொன்று
முத்தான அசுபதியாம் சித்துவொன்று
முறையான சிங்கமுகச் சித்துவொன்றே.

சித்திக்கும் ரிஷபமுகச் சித்துவொன்று
சிவசிவா சித்துமாகச் சித்துவொன்று
பத்திக்கும் பரமபரச் சித்துவொன்று
பகர்பஞ்சி கரண்சித்து அதிகவித்தை
உத்திக்கும் உத்திகரு உரிமைச் சித்து
உருவான மறைப்பிலே ஆனந்தம் சித்து
வெற்றிக்கும் வெற்றி மனை சித்துவொன்று
வேடிக்கை மதுரகெளிச் சித்துவொன்றே.

மதுராதி மாமோகச் சித்துவொன்று
மங்கையர்க ளதிமோகச் சித்துவொன்று
விதனமுடன் விதனம் வரும் சித்துவொன்று
வேடிக்கைக் காலத்தில திகத சித்து
சுகமான சலதம்பச் சித்துவொன்று
சுருக்கமான அக்கினியி லனந்தம் சித்து
அதமான மாரணத்தி லனந்தம் சித்து
ஆக்கையுறு மாறாட்ட மானசித்தே.

மாறாட்ட மான பேதமாம் சித்து
வையகத்தோர் தனைமயக்கும் வாடைசித்து
நீறாட்ட மானதிலே நனையாச் சித்து
நிஷ்டையிலே தம்பிக்கும் வாயுத் தம்பம்
கோறாட்ட வினோதத்தி லதிக சித்து
குமரிவிளை யாடுகிற கோலச் சித்து
பாராட்டம் பண்ணுகிற அரவின்சித்து
பகைத்தவர்த மதியகற்றும் பாரிச்சித்து.

பாரப்பா முத்திதரப் படைக்கும் சித்து
பார்க்கையிலே தீயெரிந்து பரக்கும் சித்து
நேரப்பா தீ அவிக்கும் சித்து
நிமைக்கு முன்னே காதவழி நெருங்கும் சித்து
வீரப்பா செய்யாமலடங்கும் சித்து
வெகுகோடி சித்துக்களின் விவரமாக
ஆரப்பா அறிவார்க ளறுபத்துநாலு
மடக்கமு டனாடுகிறது நீதான் பாரே

இனி இவற்றை தனித்தனியாக பார்ப்போம்.

## பிரமவதிகச்சித்து

உண்டான சித்து வகைக்குவமை கேளு
உறுதியுள்ள புலத்தியனே உனக்காய் சொல்வேன்
செண்டான ஊரக்குருவி பிச்செடுத்து
செந்தேனும் கருந்தேனும் விட்டுமைந்தா
நன்றாக மதிக்கும் போல் மைந்தா
நன்மையுள்ள மைபோல நலமாயக் காணும்
குன்றாத சிமிழ்தினலே பதனம்போடே

போட்டவுடன்ரேசகமும் பூரகமும் பண்ணி
புனிதமுடன் கும்பகத்தில் நின்றால் மை;நதா
நாட்டமுடன் நாலுதிக்குலுள்ள சேதி
நலமாகத் தோணுமடா நலமாய் மைந்தா
தேட்டமுடன் இந்தமுறை சித்து தானும்
திறமான பிரவேசச் சித்துமாகும்
வாட்டமில்லா மனதடங்கி நில்லுநில்லு
மைந்தனே இன்னுமொரு வரிசை கேளு

<u>பொருள்</u>

உறுதியான மனநிலையுள்ள என் மாணவனே புலத்தியனே. உனக்காகச் சொல்லுகிறேன். ஊர்க்குருவி பிச்செடுத்து செந்தேனும் கருந்தேனும் விட்டு நன்கரைக்க மைபோலாகும். இதை ஒரு சிமிழில் சேமித்து வைத்து தேவையேற்படும்போது குருவை மனதில் நினைத்து வணங்கி இதைத் திலகமாக தீட்டிக்கொண்டு கும்பித்து நிற்க நாலுபக்கத்திலும் உள்ள செய்திகளும் உன் மணக்கண்ணில் தோன்றும். இது தான் பிரவதிகச் சித்தாகும்.

## இதமகிதச்சித்து

வரிசையென்ன இதமகிதச் சித்துச்சொல்வேன்
        வால்நிண்ட கருக்குருவி பிச்சுவாங்கி
உரிசையுள்ள யேரண்டத் தெண்ணெய்விட்டு
        ஓமெனவே மத்தித்து ரவியிவல் வைக்க
மரசதிரத் திருவேறழ மையமாப் பாகு
        மூர்க்கமுள்ள மையதனைச்ட சிமிழில் வைத்து
குருபதியை நோக்கி மையைப் போட்டுக்
        கும்பித்து நிற்பதினால் குணத்தைக் கேளே.

கேளப்பா நாலூரு சனங்கள் கூடி
        கம்பீர மாயிருக்கும் கூட்டத்தேகி
கோளப்பா மிகப்பேசி சண்டை செய்வார்
        குணமாக நீயடக்கிப் போகும் போது
வேளப்பா மதன்ரதிபோ லிணங்கி நிற்பார்
        வேடிக்கை பார்கக்வும் நீ பின்பு சென்றால்
காலப்பா மிகஓங்கி மிதித்துக் கொண்டு
        கடினமுள்ள சண்டையிட்டு ஓடும்பாரரே.

பொருள்

வால்நீண்ட கருங்குருவி பிச்செடுத்து, யேரண்டத்தெண்ணை விட்டு ஓம் என்று சொல்லி நன்கரைத்து சூரிய ஒளியில் வைக்க மையாப்போகும். சிறப்பான இந்த மையை சிமிழில் அடைத்து குருவை வணங்கி திலகமாக இட்டு கும்பித்து நிற்க கூட்டமாக மிகவும் சண்டை செய்யும் இடத்திற்குச் சென்றால் நீ சென்றவுடன் சண்டையை நிறுத்தி சமாதானமாகி இருப்பார்கள். நீ அந்த இடத்தை விட்டுப் போனபின் மிக மூர்க்கமாக மீண்டும் சண்டை பிடிப்பார்கள். இதுவே இதமகிதச்சித்து ஆகும்.

## பிறையதிகச் சித்து

பாரப்பா இன்னமொரு சேதிகேளு
பண்பான பிறையாதிகச் சித்துச்சொல்வேன்
காரப்பா திகைப்பூண்டு தனைக்கருக்கி
கருவான ஏரண்டத் தெண்ணெய்விட்டு
வீரப்பா செ;யயாமல் கல்வத்தாட்ட
விபரமள்ள மைபொல வெளிச்சம் காணும்
சேரப்பா சிமிழ்தனிலே பதனம் பண்ணித்
திருவான பதிநோக்கித்திலகம் போடே

போட்டவுடன் அமாவாசை இருட்டில் மைந்தா
போக்குடனே நாலு திக்கும் பார்த்தாயானால்
நாட்டமுடன் பிறையதிக மாகத் தோன்றும்
நரரான மானிடர்க்கு அப்படியே காணம்
வாட்டமுடன் இடது கண்ணை மூடிப்பார்த்தால்
வலமான சூரியன் போல் வரிசை வரிசை காணும்
காட்டாதே உலகத்தி லிந்த நூலை
கர்தவிதி தீர்த்தவர்க்குக் காட்டு காட்டே.

பொருள்

திகைப்பூண்டை கருக்கி ஏரண்டத்தெண்ணை விட்டு கல்வத்தில் அரைக்க மைப் போலாகும். இதனைச் சிமிழில் பதனம் பண்ணி திலகமிட்டுக் கொண்டு அமாவாசை இருட்டில் பார்க்க நாலு திசையும் வெளிச்சம் தெரியும். இடது கண்ணை மூடி வலது கண்ணால் பார்க்க சூரிய ஒளியில் பார்த்தால் எப்படி தெரியுமோ அப்படித் தெரியும். இதுவே பிறையதிகச் சித்து ஆகும்.

## அங்கிச்சித்து

காட்டவே பிறையதிகச் சித்து சொன்னேன்;
கருவான அங்கிசத்தின் சித்துச் சொல்வேன்
பூட்டாத மின்மினியாம் பூச்சி தன்னை
பொறுக்கியொரு சிரங்கதனைப் பீங்கானினலிட்டு
கூட்டுவா யேரரண்டத் தெண்ணெய் விட்டு
குருவான கருவிட்டு ரவியில் வைக்க
ஆட்டான திகைப்பூட்டு உருகிநல்ல
அரக்குநிற மையெனவே அன்பாம் பாரே

அன்பான மையெடுத்துச் சிமிழில் வைத்து
அடமெனும் கும்பமுனிக் கடிமையாகி
நிம்பாமல்நீஇருந்து திலகம் போட்டு
நின்றிடதிதைக் கும்பித்து அருளைநோப றோக்கு
சம்பிரமாய் பூ மிதனைப் பார்க்கும்போது
தட்டாத பாதாளங்; கெசமாய்த்தோற்றும்
வம்பான பாதாளம் பார்க்கும்போது
மனதுபய மாகவேதான் தோற்றும் பாரே

பொருள்

மின்மினிப் பூச்சி ஒரு சிரங்கை எடுத்து அதனை பீங்கானில் இட்டு அத்துடன் ஏரண்டத்தெண்ணை சேர்த்து, குருவினை மனதில் தியானித்து வெய்யிலில் வைக்க அது அரக்கு நிறமுள்ள மையமாகும். இதனை சிமிழில் சேகரித்து வைத்து தேவையான பொழுதில் திலகமாய் இட்டுக் கொள்ள பூமியின் ஆழத்தில் உள்ளவைகள் தெரியும். அப்படி பார்க்கும் போது பயமாக இருக்கும். இதுவே அங்கிசச் சித்து ஆகும்.

## சுக்கிலச் சித்து

பாரப்பா அங்கிசச் சித்து சொன்னேன்
பாங்கான சுக்கிலத்தின் சித்துக்கேளு
நீரப்பா நாதமதைப் பீங்கானி லிட்டு
நிறையாகப் பெருங்காயந் தன்னிற் சேர்த்து
காரப்பா ரவிதனிலே வைத்துப்பாரு
காரமது தானேறி புளிபோலாகும்
சேரப்பா சிமிழ்தனிலே பதனம் பண்ணி
சிந்தைமன தொன்றாக அறிவில் நில்லே.

நில்லென்று தாயினித்துச் சம்போகம் செய்யில்
நிசமான கடுகளவு புளிதான் கொண்டு
சொல்லொன்றும் பேசாமல் சம்போகித்தால்
சுருக்கமான விந்தததுவும் மேலே ஏறும்
கல்லென்ற மலையதுவும் நகர்ந்தா லுந்தான்
கழலாது விந்துவது கட்டிப் போகும்
மல்லென்ற மல்பொருந்தும் கோடிபெண்ணை
மதனவொலி சத்தமது சொல்லொண்ணாதே

சொல்லொணா லீலைளிலே மதன்போலாடு
தோகைமனம் வேறானால் சொல்லக்கேளு
நல்லதொரு அடக்கமென்ற புளியாத் துப்பு
நாரியுட னுனதுவிந்த சர்போற் பாயும்
புல்லென்ற புல்லருக் கிந்த கலைப்
புகலாதே அவர்கிளடம் பேசவேண்டாம்
வல்லென்ற சுக்கிலத்தின் சித்துமாகும்
மகத்தான பிரமகுலச் சித்துகேளே

பொருள்

நாதத்தை பீங்கானில் இட்டு அதற்கு சமமாக பெருங்காயம் சேர்த்து வெய்யிலில் வைக்கப் புளி போலாகும். இதை எடுத்து சிமிழில் அடைத்து சேமித்து வைத்து, தேவைப்படும் போது இந்தப் புளியில் கடுகளவு எடுத்து வாயில் போட்டுக் கொண்டு சம்போகிக்க விந்து விழாது. புளியைத்துப்ப விந்து வெளிப்படும்.

## பிரமகுலச் சித்து

கேளப்பா செம்பருந்து பிச்செடத்து
　　கிருபையுட னாதவிந்து மொன்றாயச் சேர்த்து
கோளப்பா வாராமல் புழுகு சேர்த்துக்
　　கூர்மையடன் மத்திக்கும் போதிலையா
கூழப்பா போலாகி யிறுகி மையாய்
　　குணமாக இருக்குமடா சிமிழில் வைத்து
நாளப்பா மூலமதில் திலதம் போட்டு
　　நன்மையுடன் கும்பகத்தில் நின்றுபாரே

பாரப்பா உனதுருவைக் கண்டோரெல்லாம்
　　பரப்பிரம்ம சொரூபமெனப் பணிவாரையா
காரப்பா மவுனமதா இருந்து கொண்டு
　　காசினியோர் செய்தொழிலைக் காணுகாண
பேரப்பா பிரமகுல மெனறே சால்வார்
　　பேசாமல் திலகமதை யழித்தாயானால்
சீரப்பா உனதுருத்தான் சுபமதாக
　　செகத்தோர்க்குத் தோனுமடதா தெளிந்து வாரே

பொருள்

செம்பருந்தின் பிச்செடுத்து நாத விந்து ஒன்றாய்க் கூட்டி புனுகு சேர்த்து மத்திக்கும் போது கூழாகிப் போய் மையாகும் இதை சிமிழில் சேகரித்து தேவைப்படும் போது கும்பித்து நின்று மையை திலகமாக தீட்டிக் கொள்ள உன்னுருவைக் காண்போரெல்லாம் பிரம்மா சொரூபம் என்று பணிவர். அந்த திலகத்தை அழிக்க பழைய உருவம் போல தோன்றுவாய். இதுவே பிரமகுலச் சித்து ஆகும்

## பெண்மயச் சித்து

பாரப்பா பிரமகுலச் சித்துச் சொன்னேன்
பதிவான பெண்மயத்தின் சித்துக் கேளு
ஆரப்பா அறிவார்கள் காமரூபி
அசுபதியி னாள்தனிலே கொண்டுவந்து
நேரப்பா கருவினால் பித்தும் சேர்த்து
நினைலாகத் தொனெடுத்து வைத்துக் கொண்டு
சீரப்பா தாரமது கூடச்சேர்த்து
திறமாக ஐங்கோலத்ததைலம் வாங்கே

வாங்கியே கல்வத்தி லாட்டும் போது
மயங்காமல் தயிலம்விட்டு மாட்டி ஆட்டிசூ
ஓங்கியே ஆட்டிவரி லெரன்ன சொல்வேன்
ஓகோகோ அருணநிற மையேயாகும்
தீங்கில்லாச் சிமிழ்தனிலே பதனம்பண்ணி
செங்கதிருஞ் சோதியுமே சேர்ந்த நாளில்
பாங்குபெறத்தி லகமிட்டுப் பசியேதான்
பதிவாக ரேசகபரகமும் பண்ணே

பண்ணியே கும்பகத்தி னின்னாயானால்
பாருளு ரதிமோகப் பெண்தானென்று
சண்ணையொடு சயிக்கணைகள் பேசுவார்கள்
தன்மனதைத் தானடக்கும் சிரிப்புக் கொண்டு
கன்னிகையே உன்மனது என்று சொல்லிக்
கால்தனிலே விழுவார்கள் கருவாய் நியும்
உன்னியே திலகமதை அழித்தா யானால்
உடனின்ற பெண்தேடி ஏங்குவாரே

ஏங்கியே மனந்தளர்ந்து பெருமூச்சேகி
        என்ன சொல்வேனகக் மதன்ரதியோ மோகியோ பேயோ
மாங்குயில்போல் நின்ற பெண்ணை நினைக்குமுன்னே
        மறைந்ததினால் மனிததெர்ரா மாயமாய
தூங்குவது சொர்ப்பனம் போலாச்சே யென்று
        சொல்வார்pக ளனைவோரும் துயரம் வைத்து
பாங்குடனே பெண்மயத்தின் சித்தை நீயும்
        பகராதே யொருவருக்கும் பண்பாய்த தானே

<u>பொருள்</u>

காமரூபிணியை அஸ்வினி நாளில் கொண்டுவந்து கருவினால் பிச்சும் சேர்த்து தாரமும் சேர்த்து அந்தக் கலவையைக் கொண்டு ஐங்கோண தைலமெடுத்து அதைக் கல்வத்திலிட்டு ஆட்ட அருணன் நிற மை போலாகும், இதனைச் சிமிழில் சேமித்து பின் செங்கதிரும் சொதியும் சேர்ந்த நாளில் திலகமிட்டு கும்பித்து நின்றால் ரதி என்றும், மோகனப் பெண் என்றும் காண்போர் மயங்கி நிற்ப்பார். திலகத்தை அழித்தால் பெண்ணைக் காணாது ஏங்குவர்.

## பவழுலச்சித்து

தானென்ற பெண்மயத்தின் சித்து சொன்னேன்
        தவமான பவமூலச் சித்துக் கேளு
கானென்ற கானகத்தில் வாழும் நல்ல
        கவரியெனு மானுடைக் குளம்பை வாங்கி
பானென்ற பாண்டமிதி லிட்டு நல்ல
        பசுமையுள்ள துருசதுவும் கெநற்தி சேர்த்து
ஊனெனட்ற அமுரிவட்டு எரித்தாயாகில்
        உடன் சேர்ந்த நீர்வற்றித் தயிலமாமே

ஆமப்பா தயிலமதலி வீரம் பூரம்
        அன்பான புனுகிட்டு மத்தித்தேன்தான்
நாமப்பா சொல்லுகிறோம் ரவியில் வைக்க
        நல்லதெமாரு மெழுகாகி மைபோலாகும்
காமப்பால் சென்றதொரு மையை நீயும்
        காட்டெருமைக் கொம்புகளில் பதனம் பண்ணி
தாமப்பா தன்னிலையைள யறிந்துகொண்டு
        தயங்காமல் ரேசக பூரகமும் செய்யே

செய்த பின்பு கும்பகத்தில் நின்றுகொண்டு
        செப்புதனிவல் மையெடுத்துத் திலகம் போட்டு
உய்தமள்ள பிடரிதனில் தடவிமைந்தா
        உன்மனையைத் தான்தொழுது நின்றாயானால்
துய்தமுள்ள காளைவடி வாகத் தோற்றி
        தொல்லுலகி லிக்காளை யார்மாடென்பார்
பய்தவர்க ளனைவோரம் அதிசயமாயக் கூடி
        பதித்தொரு கயிறெடுத்துப் பிடிப்பார்

பிடிக்கையிலே கணைமறைப்பாய் மையைத்தேய்தது
பின்பாக நின்றிடில்நீ சென்றாயானால்
அடுக்கின்ற பய்தலர்க ளதிசயித்து
அடத்தநின்ற காளையது மாயமாக
நொடிக்கு நிமைக் குள்ளாக மறைந்ததாலே
வோகோகோ மாபூத மென்றுசொல்ல
முடுக்கியவ ரோடி டுவார் பாருபாரு
மூர்க்கமுள்ள சாலவித்தை யதீதந்தானே

பொருள்

காட்டில் வாழும் கவரிமான் குளம்பைக் கொண்டுவந்து பாத்திரத்தில் போட்டு நல்ல பசுமையான துரிசு, கேந்தி, அமுரி சேர்த்து எரித்தால் நீர் வற்றி தைலமாகும், இந்தத் தைலத்தில் வீரம், பூரம், புனுகு சேர்த்து மத்தித்து வெய்யிலில் வைக்க மையாகும். இந்த மையை திலகமாக தீட்டிக் கொண்டு பிடரியை தடவிப் பார்க்க உலகிலுள்ளோர் கண்களுக்கு எல்லாம் கொடிய காளை போல தோன்றுவர். கயிறேடுத்து பிடிக்க முயல்வர், அந்தத் திலகத்தை அழிக்க காளை உருவம் மாறும்.

**ஈசுரகுலச்சித்து**

தானென்ற பவமூலச்சித்து சொன்னேன்
தவமான யீசுரகுலச் சித்துக்கேளு
கானென்ற கவரிமான் பித்துதன்னை
கருவான ஈரலுட தைலம் வாங்கி
வானென்ற தயிலமதில் பித்துப்போட்டு
உருவான நாதமுடன் புனுகு சேர்த்து
மானென்ற கல்வத்தில் மத்தித்தாக்கால்
மகத்தான கருக்குழம்பாய் மையாம்பரே

மையான கருமையைச் சிமிழில் வை;தது
மகத்தான கருவெனவே மகிழ்ந்ததுகாரு
மெய்யாகச் சொல்லுகிறேன் பூரணத்தை நோக்கி
விசையாக ரேசக பூரகமம் செய்து
அய்யனே புலத்தியனே கும்பகத்தில் நில்லு
அறிவலா லே குருபரனே அன்பாற்கொண்டு
வய்யகமெல் லாம்புகழ மையேயென்று
மனதுறுதி செயலுறுதி வைத்துக்காரே

காரப்பா யேகாந்த வெளியிலேதான்
கருணையுடன் வடமுகமா இருந்துகொண்ட
நேரப்பா நின்றிநihல தன்னைப் பேற்றி
நீமகனே புருவத்தில் திலகம்போட்ட
கூரப்பா அஞ்செழுத்தை யோதிக் கொண்டு
குருவென்று நீ இருக்க குணத்தைக்கேளு
ஆரப்பா கண்டாலுங் குருவேயென்று
ஆள்கூட்டம் ரொம்பவும்தான் கூடுந்தானே

தானென்ற ஆள்கூட்டம் மிகவம் கூடி
        சதாசிவனோ தவமுனியோ தம்பிரானோ
தேனென்ற வசனமதாயத் தொழுது போற்றி
        செகத்திலுள்ளோர் கூடியே நிற்கும்போது
மானென்ற மையதனைக் கண்மறைப்புப் பார்த்து
        மார்க்கமுடன் அழித்திடவே மனிதனாகும்
வானென்ற மாமுனிதா னெங்கே என்று
        மார்க்கமுடன் மயங்கிமிக மருகுவாரே

<u>பொருள்</u>

கவரிமான் பிச்ச்செடுத்து அதன் ஈரலுடன் தைலம் வாங்கி முன்சொன்ன பிச்சைப் போட்டு நாதமுடன் புனுகும் சேர்த்து கல்வத்திலிட்டு மத்திக்க மை போலாகும். இந்த மையை திலகமாக இட்டுக் கொண்டு  வடக்கு முகமாக இருந்து கொண்டு ஐந்தெழுத்து மந்திரத்தை ஜெபித்துக் கொண்டு இருக்க சதாசிவனோ, தவமுநிவரோ , என்று எண்ணிக் கூட்டம் கூடி மயங்கி நிற்பர். இந்த மையை அழித்துவிட மனிதன் என்று நினைத்து அகன்றிடுவர்.

## விஷ்ணுகுலச்சித்து

பாரப்பா ஈசுரகுலச்சித்து சொன்னேன்
பண்பாக விஷ்ணுகுலச் சித்துகேளு
ஆரப்பா ஆறிவார்கள் குலமான் தன்னில்
அடவான பித்துடனே கொழுப்பு வாங்கி
சீரப்பா கொழுப்பில் நெய்யை வடித்துக் கொண்ட
திறமான பித்துடனே சேத்துக் கொண்ட
கனமான பேதியுடன் பூரணம் சேரே

சேர்த்து மிகமதித்துப் பார்க்கும்போது
திறமான கருவான மையாப் போச்சு
காத்துமிக சிமிழில்வைத்துப் பதனம் பண்ணு
கண்ணொளிக்குள் விணொளியைக் கருதிப் பார்த்து
போற்றிமிகக் கும்பகத்தில் நின்றுகொண்டு
புனிதமுள்ள மையெடுத்துத் திலனகம் போட்டு
பார்த்துமிக வாயுவெனும் பீசந்தன்னைப்
பருவமுடன் தொழுததினால் பருவங்கேளே

கேளப்பா அனுமனுட ரூபம்போல
கெடியாகக் காணுமடா கண்டோரெல்லாம்
கோளப்பா மிகப்பயந் தோடுவார்கள்
கொக்ரித்து நீ ஓடிக் குதித்துப் பாய்ந்து
காலப்பா மிகவஸ்ரீணி நின்றாயனால்
கண்டவர்க ளதிசயமாய்ப்ப பார்ப்பாரப்போ
நீளப்பா மிகத்தொட்டுத் திலகந் தன்னை
நிமைக்குமுன்னே அழித்திடுவாய் நிதான்பாரே

பாரப்பா அதன்பின் உன்னைக் காண்பார்
பார்தநின்ற அனுமானாங் குரங்கைக் காணோம்
வீரப்பா செய்தவொரு பூதந்தானோ
வெருளுகின்ற பிசாசாமோ பேயோவென்று
ஆரப்பா அலருவார் மாயா ரூப
அனுமனல்ல தேவதை அறிவில் சேர்ந்தால்
செகச்சால மானவித்தைத் திறமிதாமே

பொருள்

குலமானின் கொழுப்பும் , பிச்சும் எடுத்து, அந்தக் கொழுப்பிலிருந்து நெய்யை வடித்தெடுத்து,அதனுடன் முன் சொன்ன பிச்சும் சேர்த்து கல்வத்திலிட்டு பேதியும் , பூரணமும் சேர்த்து மத்திக்க மை போலாகும். இதை சிமிழில் பதனம் செய்து, இந்த மையை திலகம் தீட்ட அனுமாருடைய உருவம் போல தோன்றும், காண்போர் மிகப் பயந்து ஓடுவர். மையை அழித்துவிட பழைய உருவம் தோன்றும்

**அசுரகுலச்சித்து**

திறமான விஷ்ணுகுலச் சித்து சொன்னேன்
        திர்க்கமா யசுரகுலச்சித்து சொல்வேன்
வரமான ஐயங்பேகாலத் தயிலம் வாங்கி
        வாபனமாயத் தயிலமதைப் பதனம்பண்ணி
திறமான நாதமொடு விந்து சேர்த்து
        தறமான பச்சோந்தி பித்தும் கூட்டி
கற்மாக கல்வத்தில் மத்திக்கால்
        கருhன கருச்சேர்ந்து மையாம்பாரே

மையான மையெடத்துப் பதனகம் பண்ணி
        வசமான புனுகெடுத்து மையிற் சேர்த்து
கையாலே பத்தித்துச் சிமிழில் வைத்துக்
        கருணையுடன் செகசோதி பாதந்தன்னை
மெய்யாகவே தொழுது குருவைகப் காத்து
        விசையாக ரேசக பூரகமும் பண்ணி
செய்யவே கும்பகத்தில் நின்றுகொண்ட
        திறமான மையெடுத்து திலகம் போடே

போட்டவுடன் உன்னுருவை ஒருவர் கண்டால்
        புதுமையுடன் அதிசயமாயப் பார்பபார் கேள
நாட்டமுள தேகமலைபோல் தோற்றி
        நலமான தேகமது முன்போலே
தோற்றாது தோற்றமது வெளிவேறாக
        தொல்லுகர் அதிசயமாப் பார்ப்பாரப்பா
காட்டாத திலகமதை நினைக்கு மன்னே
        கையாலே துடைத்துநீ அப்டபால் போவே

போனவுடன் கூடிநின்ற பேர்களெல்லாம்
        பொல்லாத நிபமதை டிமாயமாக
காணமல் போனதுதா என்ன சொல்வேன்
        கண்டவர்கள் அதிசமயர்ப் பேசுவார்கள்
தானான இக்கருவைத் தானே தானாய்
        தனதாகப் பார்த்ததினால் பலிக்கும் சித்தி
கோனான குருவருளா லிந்த நூலைக்
        குணமாகப் பரத்தினுட சித்துபாரே

<u>பொருள்</u>

ஐந்கோலத் தைலம் வாங்கி பதனம் செய்து நாதமொடு விந்து சேர்த்து பச்சச் சந்திப் பிச்சும் சேர்த்து கல்வத்திலிட்டு மத்திக்க மை போலாகும். பின் அதனுடன் புனுகும் சேர்த்து மத்தித்து பின் அதை திலகமாக தீட்ட தேகமானது மலை போல் தோன்றும் அழித்து விட பழைய உருவம் தோன்றும் அனைவரும் அதிசயமாய்ப் பார்ப்பார்.

## தானியச்சித்து

சித்தான அசுரகுலச்சித்துச் சொன்னேன்
        திறமான தானியத்தின் சித்துச்சொல்வேன்
முத்தான அட்சயமாய் மூலிதன்னை
        மூர்க்கமுடன் கொண்டுவந்து தயிலம் வாங்கி
வித்தான ஏரண்டத் தயிலத்தோட
        விசையான ஐயங்கோலத் தயிலம் கூட்டி
வற்றாத தயிலமது மூன்றுமொன்றாய்
        வார்த்துவிடு பீங்கானினன் வகையஙாயத் தானே

வகையான மூன்றுவகைத் தயளிலந்தன்னை
        வான்கதிரில் வைத்திடநீ வன்மை கேளு
பகையான வொன்றையொன்று கொண்டு நல்ல
        பருவமுள்ள மெழுகாகி யிறுகிநிற்கும்
தகையாமல் மெழுகைநீ யெடுத்துக்கொண்டு
        தாமென்ற செம்புதனில் அடக்கம்பண்ணி
திகயமாமல் தேசத்தில் சஞ்சாரம் செய்யில்
        திடமாகச் செய்யிறதோர் சித்துக்கேளே.

கேளப்பா ஓடெடுத்து வட்டமாக
        கிருபையுடன் தானுரைத்து சேதிகேளு
வேளப்பா எரித்தசிவன் தன்னால் செய்த
        விசையான தயிலமதைக் கிண்ணத்தப்பி
கோளப்பா ரவியில் வைக்கக் கிண்ணந்தானும்
        கூர்மையுள்ள தயிலமதை உண்டுநல்ல
தேளப்பா சிவந்தநிறம் போலே காணுந்
        திறமான பாத்திரத்தின் செய்கைகேளே

கேளப்பா புலத்தியனே தர்மவானே
கேசரமா மட்சயத்தின் பாத்திரமாகும்
வேளப்பா எரித்தசிவன் கை யால் உலர்த்தி
வெகுகோடி சீவசெந்துக் கன்னமீந்தார்
நாளப்பா தினம்பார்த்து பாத்திரந் தன்னை
நலமாகப் பூசித்து அர்ச்சனைகள் செய்து
ஆளப்பா அட்சயமாம் பாத்திரந் தன்னை
அனுதினமும் பூசித்து அருளைப் போற்றே

போற்றியே குருபரனைத் தியானம் செய்து
பொருத்தமது தான்பார்த்து கழஞ்சுகூட்டி
நாற்றிசையி லுள்ளநவ தானியந் தன்னை
நலமான களஞ்சியத்தில்போட்டுகொண்டு
வாட்டுறவு இல்லாத பாத்திரந்தன்னை
வாங்கியே குருபரனை மகிழ்ந்து பொற்றி
தேட்டமில்லா தேகொடுக்குந் தெய்வமென்று
சிந்தைமன தொன்றாகப் பூசைபண்ணே

பூசைபண்ணி பாத்திரத்தைக் கையிலுந்தி
புகழ்பெருகுங் களஞ்சியத்தின் வாசல்சென்று
ஓசையுடன் மந்திரத்தைத் தியானம் செய்து
ஓணநடைசயமாய் வளர்ந்து உறுதியாக
நேசமுடன் பாத்திரத்தை வைத்தாயானால்
நிச்சயமாய்த் தானெடுக்கத் தொலையாதப்பா
வாசமுள்ள பூரணத்தின் மகிமையாலே
வளர்ந்துதடா தானியங்கள் நிதிகள்தானே

தானென்ற பாத்திரத்தை எடுக்கும் போது
தனதான களஞ்சியமும் வற்றிப்போகும்
கோனென்ற குருவருளால் சித்துவித்தை
குருவறிந்து கருவறிந்து பார்த்தாயானால்
தேனென்ற சென்மமது பிலத்துதையா
திருவாகும் குருவாகும் திறமிதாகும்
வீணொன்றும் பேசாமல் விண்ணைப் பார்த்து
வேதாந்த பதியில் மனம் நிறுத்திபாயே

பொருள்

அட்சய மூலிகையைக் கொண்டுவந்து தைலம் எடுத்து, அத்துடன் எரண்டத்தைலமும், ஐங்கோண தைலமும் சேர்த்து பீங்கானிலிட்டு வெய்யிலில் வைக்க அது இறுகி மெழுகாகும், அதை செப்பு சிமிழில் சேகரித்து வைத்து. பின் மண் பாத்திரம் ஒன்று எடுத்து இந்த மெழுகை அதில் நன்றாக பூசி அந்தப் பாத்திரத்தை வெய்யிலில் வைக்க அந்த பாத்திரமானது தைலத்தை நன்கு உறிஞ்சி சிவந்திருக்கும். இந்த பாத்திரமே சிவபெருமான் வெகு கோடி சீவசுந்தரர்களுக்கு அன்னம் அளித்த பாத்திரமாகும். இந்த பாத்திரத்தை கையில் எடுத்துக் கொண்டு தானியங்கள் சேர்த்து வைக்கும் களஞ்சிய வாசலுக்கு சென்று வாசலில் நின்று உன் குருவின் மூலமந்திரம் கூறி குருவை தியானித்து பாத்திரத்தை களஞ்சிய அறையினுள் வைத்துவிட்டு தானியங்களை அள்ள அள்ள குறையாமல் இருக்கும். பின்னர் நீ பாத்திரத்தை எடுத்து விட்டாயானால் களஞ்சியத்திலுள்ள தானியங்கள் எல்லாம் வற்றி விடும் இதுவே தானியச் சித்து ஆகும்.

## பிரமாதிச்சித்து

ஆமப்பா தானியவகை சித்துச்சொன்னேன்
　　அன்பான பிரமாதி சித்துக்கேளு
நாமப்பா சொல்லுகிறோ மத்தினுடவேரும்
　　நலமான அவ்விரையும் கூடச்சேர்த்து
தாமப்பா குழித்தயில மிறக்கிக் கொண்டு
　　தனமான பூரணமும் கூடச்சேர்த்து
காமப்பால் விட்டாட்டி ரவியில் வைக்க
　　கருணையுள்ள பிரமாதி மையுமாச்சே

ஆச்சப்பா மையெடுத்துச் சிமிழில் வைத்து
　　அடக்கமுட னவையடக்க மன்பாயச் செய்து
மாச்சல் செயும் பயல்களுட மேனிதன்னில்
　　வஞ்சகமாயத் தடவிவிட மருட்டுந்தானும்
பேச்சப்பா பேசாமல் பிணம்போல் நிற்பான்
　　பிரமான வெறிபிடித்துப் பேய்போலாவான்
மாச்சல்செய்து தீராம லுன்னிடத்தில் சொன்னால்
　　மார்க்கமுடன் தண்ணீரால் துடைத்துப்போடே

துடைத்தஉடன் மருள்நீக்கிப் பேசுவான் கேள்
        சுகமாகப் பேசியவ னிருப்பான் கேளு
மடத்தனமாய்க் கருவெளியில் சொன்னாலையா
        மகத்தான குற்றம் வரும்மனதில் காரு
அடைத்து வைத்த பொருளெல்லாம் இதனிற் சொன்னேன்
        ஆயிரத்து இருநூறு மார்தான் காண்பார்
இடத்தில் வெகு கருவறிந்து இடத்தைப்பாரு
        இன்பமுள்ள நூலதனைப் பதனம் பண்ணே

<u>பொருள்</u>

உமத்தை செடியின் வேரும் விதையும் எடுத்து குழித் தைலம் எடுத்து அந்த குழித் தைலத்துடன் காரம் பசுவின் பால் விட்டு அரைத்து சூரியனில் வைக்க மையாகும். இதை சிமிழில் பத்திரமாக சேமித்து பின் இந்த மையை வேண்டாதவர்கள் மேலே தடவினாயானால் பேய் போல அலைவார்கள், பிணம் போல விரைத்து நிற்பார்கள். பின்னர் மை தடவிய இடத்தை தண்ணீரால் துடைத்து விட நலமடைவார்கள்.

## அனுமாதிச்சித்து

வண்ணப்பா பிரமாதிச்சித்துச் சொன்னேன்
        பகரவொண்ணா அனுமாதி சித்துக்கேளு
விண்ணிறைந்த பூரணமோர் பலத்தை வாங்கி
        விவரமுள்ள காரோட்டில் வைத்துமைந்தா
திண்ணமுள்ள ரவிபீசம் கூடச்சேர்த்து
        செங்கதிரோன் முன்னிலையாய்த் தயிலம் வாங்கி
நல்லதொரு பீங்கானில் பதனம் பண்ணே

பதனமுள்ள தயிலமதில் விபரம்கேளு
        பாங்கான சா றதனில் விட்டுமைந்தா
மதனமுள்ள பரராச கேசரியைத் தானும்
        மார்க்கமுடன் தானுரைத்துச் சிமிழில்வைத்து
வதனமுடன் வழிபாதை தனிலிருக்கும்
        வஸ்து        வெனும் பிள்ளையார் நெற்றிதனில்
சதமாகத்திலகமிட்டுப் பார்த்தாயானால்
        சத்தியெனும் கணபதிதான் பெரிதாம்பாரே

பார்த்ததொரு கணபதியைப் பார்த்தோரெல்லாம்
        பண்பாகப் பெரிதாக இருக்குதேது
நேற்றிருந்த பிள்ளையா ரல்லக்காணும்
        நிச்சயமாய் இதுவேறே யார்தான் வைத்தார்
மாற்றுதற்கு இஷ்டத்தில் மனிதருண்டோ
        மகத்தான பெரிதாக இருக்குதப்பா
வீற்றிருக்கும் பிள்ளையார் மகத்துவமுண்டு
        வேண்டுவா ரனைவோரும் வேண்டுவாரே

வேண்டிமிகப் பிணந்து பொங்க லிடும்போதையா
        வேதியனும் குருக்கள்வந்து அபிடேகம்பண்ணி
தீண்டியே வஸ்திரத்தால் துடைக்கும்போது
        சிவசிவா பழையபடி ரூபம்காணும்
ஆண்டவனார் செயலிது பலரும் பாரு
        அணுவாகு மதன்பிறகு மேருவாகும்
பூண்டதொரு மனிதரெல்லா மதிசயித்து
        போக்குவரத் தாயிருப்பர் புதுமைதானே

பொருள்

பூரணம் ஒருபலம் எடுத்து காரோட்டில் வைத்து ரவிபீஜம் கூடச்சேர்த்து செங்கதிரோன் முன்னிலையில் தைலம் எடுத்து, ஐங்கோண தைலம் எடுத்து சேர்த்து பீங்கானில் பத்திரப்படுத்தி வைத்து.இதனை வழியில் செல்லும் பொது உள்ள பிள்ளையாரின் நெற்றியில் சதமளவில் பொட்டாக வைக்க, பிள்ளையார் அனைவருக்கும் அளவில் பெரியவராக தோன்றுவார். சக்தியுள்ள பிள்ளையார் வளர்கிறார் என்றெண்ணி எல்லோரும் பூக்களிட்டு படையல் வைத்து குருக்களை அழைத்து அபிஷேகம் செய்ய சொல்ல, குருக்கள் வந்து அபிஷேகம் செய்து துணியால் துடைக்க பழையபடி பிள்ளையார் சிறியதாக தோன்றுவார். எல்லாம் தெய்வ செயல் என்று எல்லோரும் போற்றுவர்.

## விகுர்தி சித்து

காணப்பா அனுமாதி சித்துச்சொன்னேன்
        கல்லான விகுர்தியின் சித்துச் சொல்வேன்
பூணப்பா நவச்சாரம் கல்லுப்போடு
        பொங்கிநின்ற பூநீறும் கருவும் கூட்டி
தேன்பபா கல்வத்தில்இட்டு ஆட்ட
        சிவந்தநிற மெழுகாகும் சிமிழில் வைத்து
பேணப்பா அதனையே பதனம் பண்ணி
        பிடாரியெனும் துர்க்கையுட கோயில் செல்லே

செல்லப்பா கோவிலுக்குத் துர்க்கை தானும்
தீர்க்கமுள்ள வடிவுருவாயப் பார்த்துநீயும்
கல்லப்பா ஒரு சிலையின் கண்ணிலேதான்
        கனமான மையெடுத்துத் தடவிப்போடு
மல்லப்பா பிடித்ததுபோல் மையும்கல்லில்
        மண்டிநின்ற எண்ணையது வொன்றாய்ச் சேர்ந்து
புல்லப்பா பனிநீர்போல் வீழும்பாரு
        போக்கறியா பூர்ச்சனங்கண் டேதுசொல்வார்

வானவர்கள் போற்று மயேஸ்வரிக்குத் தானும்
        வரிவிழியின் கண்ணாலே நீர்களோடி
மானமுள மார்புமடி காணாதோடி
        வடிந்தசலம் என்னசொலடவே னையாவென்று
கோனான ராஜனிடம் செல்வானப்பா
        கோலமுள்ள ராசனங்கேவருவான் பாரு
தேனான பானமுடன் மதுக்கள் வைத்துச்
        சிறப்புமிகத் தானடக்கிக் கொள்வான் பாரே

பாராளும் ராஜனுந்தா னிருக்கும்போது
        பக்குவமாய் ஜெகச்சாலம் பண்ணுபண்ணு
சீராகக் கருவித்தை யாடும்போது
        சீக்கிரத்தில் பெண்மயத்தின் மையை நீயும்
கூறாகப்போட்டவுடன் பெண்ரூபமாகும்
        குணமாகக் கண்டவகள திசயமாயப் பார்ப்பார்
மாறாத மறைப்பு மையை அதன்மேல்போடு
        மாயமாய்ப் போனவுடன் ராசன் சொல்வான்

சொல்வுன் தேவியுட சித்துவொன்று
        தோணவே சிறப்புமிக நடத்தி வைப்பான்
நல்லதொரு சித்துக்களி லனந்த முண்டு
        நாடகத்தி லாடுகிற பொருளிதாகும்
விள்ளாதே பொருள்களெல்லாம் சொன்னேனையா
        வேதாந்தப் பதியில் மனம் நிறுத்தியாடு
புல்லர்தொழும் விகுர்தியின் சித்துச்சொன்னேன்
        புகழ்பெரிய சித்திரத்தின் சித்துக்கேளே

<u>பொருள்</u>

நவச்சாராம், கல்லுப்பு, பூநீ, கரு அனைத்தையும் ஒன்று கூட்டி, கல்வத்திலிட்டு அரைக்க செந்நிறமான மெழுகாக ஆகும். அதை சிமிழில் சேகரித்து, துர்க்கை அம்மனின் கோவிலுக்கு சென்று கண்ணில் மையை தடவ, கண்ணிலுருந்து பனி நீர் போல வழிந்து ஓடும். அரசர் உட்பட மக்கள் எல்லோரும் அங்கு ஓடிவந்து அம்மனின் சித்து என்று படையல் படைத்து வணங்குவர்.

## சித்திசசித்து

கேளப்பா சந்தனத்தின் மரத்தின்மேலே
        கீழ்மேலாய் வாழுகிறதோர் சிவந்தவவ்வால்
நாளப்பா தினம்பார்த்துப் பிடித்துவந்து
        நல்லதொரு கருவினாற் பித்துவாங்கி
சூளப்பா ஏரண்டத்தெண்ணெய் சேர்த்து
        சுருக்கமான ரவியிலேவைக்க மெழுகாய்நிற்கும்
வாளப்பா பூரணமு மெழுகும் சேர்க்க
        வளமையுள்ள கறுப்பாகி மையாப்போமே

மையான மையெடுத்துச் சிமிழில் வைத்து
        மனோன்மணியைத் தொழுதிறைஞ்சி இணக்கமாக
கையான நடுவிரலில் மையெடுத்து
        கருணை பெறும் பூரணத்தைக் கருத்தில் வைத்து
மெய்யான பாலருட இமையில் தீட்டி
        மேடையென உப்பரிகை மேலேநின்று
ஐயாவே கண்டவதி சயங்கள் தன்னை
        அன்பாகச் சொல்லுமென்று கேளுகேளு

கேட்கையிலே ரிஷபத்தில் ஈஸ்வரனும் வாரார்
        கிருபையுடன் மயிலிமீதேறி கந்தர் வாரார்
வாட்கையுள்ள கெருடன்மேல் விஷ்ணு வாரார்
        வரிசையுள்ள கணபதியும் வாரார் வாரார்
பார்க்கமிகப் பயமான சனங்கள் தானும்
        பந்திபந்தி யாய்வருகு தென்று சொல்வான்
மார்க்கமுடன் கண்கசக்கிப் பார்க்கப் பார்க்க
        மகத்தான அதிசயங்கள் சொல்லுவானே

வானென்ற முலைப்பாலில் கண்துடைத்து
　　மார்க்கமுடன் பாரநீ என்று சொல்லி
ஊனென்ற கண்டகனா வொன்றுமில்லை
　　உத்தமனே கண்கலக்க மானதப்பா
தேனென்ற சித்தத்தின் சித்து சொன்னேன்
　　தெளிவான மனத்தோர்க்குச் சித்தியாகும்
மானென்ற மனமுடைய ரிந்துபாரு
　　மகத்தான சிவநிசியின் சித்துக்கேளே

<u>பொருள்</u>

சந்தன மரத்தில் வாழும் சிவந்த வௌவாலை குறிப்பிட்ட நாள் பார்த்து பிடித்து வந்து அதன் பிச்செடுத்து ஏரண்டத்தெண்ணெய் சேர்த்து வெய்யிலில் வைக்க மெழுகாகும் அத்துடன் பூரணமும் சேர்க்க கருப்பு நிற மையாகும். மனோன்மணி தாயை வணங்கி விட்டு அந்த மையை பலருடைய இமைகளில் தீட்டி விட அவர்களுக்கு நம்மை பார்க்கும் பொது சிவன் வருவது போலவும், முருகன் வருவது போலவும் தோன்றும், முலைப்பாலால் கண்களில் பூசிய மையை துடைத்து விட பார்த்தது அனைத்தும் கனவு என்று கூறுவார்.

## சிவநிசிச்சித்து

கேளப்பா கவரிமான் செவியிலேதான்
        கிருபையுடன் களிபோலத் திரண்டிருக்கும் நஞ்சு
நாளப்பா நம்மலையின் சார்பிலுண்டு
        நன்மையுட னஞ்செழுத்து நாதம் சேர்த்து
கோளப்பா வாராமல் ரவியில் வைக்க
        கூர்மையுட னுருகி ரெண்டு மையாய் நிற்கும்
வாளப்பா ஐங்கோலத் தயிலம் சேர்த்து
        வரிசையுடன் மத்தித்துச் சிமிழில் வையே

வைத்ததொரு மையெடுத்து தியானம் செய்து
        வளமையுடன் ஈஸ்வரன் கோயில் வாசல்
தைத்ததொரு படியதனி லெங்கும் தேய்த்து
        தயவான அதனருகே இருந்து கொள்ளு
உற்றதொரு ஈஸ்வரனைச் செவிக்க நல்ல
        உலகில் உள்ளோர் படிமீலி லுள்ளே செல்வார்
கைத்ததொரு மைகாலில் பட்டபோது
        கனலெழும்பி கண்மயக்க மாகுந்தானே

தானென்ற கண்மயக்க மாகியுள்ளே
        தான்சென்று பார்த்தவிட மெங்குந்தானும்
தேனென்ற ஈஸ்வரன் போல் கண்ணில் தோன்றும்
        சிவ சிவா என்று சொல்லி சேவிப்பார்கள்
ஊனென்ற குருக்கள் வந்து இங்கே வரும்
        உருவான நிலையிருக்கு தென்று சொல்வான்
வானென்ற வடிவான லிங்கந்தானும்
        வைத்ததிங்கே யாரெனவே சொல்லென்பாரே

சொல்லெனவே உங்களுக்குப் பயித்தியமோ வென்பான்
        சுனைகெட்ட குருக்களே நீ சொல்வது பயித்தியமே
நில்லடா என்றெனவே இருக்குஞ் சண்டை
        நிமைக்குமுன்னே அடிபிடியாய் வெளியில்வருவார்
கல்லான படிதனையே நீரால் துடைத்துக்
        கடக்கப்போய் சென்றவர்கள் கோயில் வருவார்
உல்லான கண்மயக்கம் தீர்ந்து நின்ற
        உருவான யீஸ்வரனைச் செவிப்பாரே

பொருள்

கவரி மான் காதில் களி திரண்டிருக்கும் நச்சு எடுத்து நாதம் சேர்த்து வெய்யிலில் வைக்க மைபோல திரிந்துவிடும் அத்துடன் ஐங்கோல தைலம் சேர்த்து மத்தித்து சிமிழில் சேகரித்துக் கொண்டு. இந்த மையை எடுத்து ஈஸ்வரன் கோவில் வாசல் எங்கும் தேய்த்து விட்டு, அருகில் இருந்து வேடிக்கை பார்த்தால். ஈஸ்வரனை வணங்க செல்வோர் படியின் மீது கால் வைத்து சென்ற உடனேயே கண் மயக்கம் உண்டாகி பார்த்த இடமெல்லாம் ஈஸ்வரன் உருவம் உள்ளதாக நினைத்து வணங்குவர். பூசாரி இங்கே சந்நிதானம் இருக்கிறது வாரும் என்று உங்களுக்கு என்ன பைத்தியமா? என்று கேட்க உங்களுக்கு தான் பைத்தியம் என்று சொல்லி சண்டையிடுவர். அவர்கள் வெளியில் வரும் போது படியில் உள்ள மையைத் துடைத்து விட அவர்கள் கால் பட்ட உடன் கண் மயக்கம் தீர்ந்து ஈஸ்வரனை தியானிப்பர்.

## அருணச்சித்து

பாரப்பா  சிவநிதியின் சித்துச் சொன்னேன்
        பண்பான அருணச்சித்து பகரக்கேளு
காரப்பா அரவினுட நஞ்சும் பித்தும்
        கருவாக மத்தித்து ரவியில் வைத்து
தீரப்பாரெண்டுபத்து நாளைக்குள்ளே
        சிவசிவா என்ன சொல்வேன் கருவாய் நிற்கும்
ஆரப்பா அpறவார்கள் ஐஙகோலத்தால்
        அழுத்திமிக மத்திக்க மையாய்ப் போமே

மையான அதரவுமையின் சித்துசொல்ல
        வயகத்தில் ஒருவருண்டோ மைந்தாகேளு
பொய்யான மானிடர்க்கு விஷங்கள் தீண்டி
        போராடித் திரியாமல் மயானம் சொல்வார்
கையாலே மையடுத் தடக்கம் பண்ணி
        காத்திருக்கும் ஜனங்களைநீ அடக்கம் சொல்லி
மைய்யான மையடுத்துக் கண்ணில் தீட்டி
        விசையாகத் தலையிலொார குட்டுப்போடே

போட்டவுடன் விசமிறங்கி எழுப்பி நிற்பான்
        புதுமைவேகு புதுமையென்றுநு போற்றுவார்கள்
தேட்டமுடன் உனதுபதம் காக்கவென்று
        திசையிலுள்ள மானிடர்கள் தேடிக்காண்பார்
நாட்டமுடன் மாற்றமென்ற மையைப் போட்டால்
        நற்குருவைக் காணாமல் தேடுவார்கள்
தாட்டிகமாய் மனிதனல்ல சித்தனென்பார்
        சற்குருவே யென்று சொல்லித் தாங்குவாரே

<u>பொருள்</u>

பாம்பின் நஞ்சும் பித்தும் மத்தித்து இருபதுநாள் வைக்கவும். பின் ஐயங்கோலத்தால் மத்திக்க மையாகும்.பாம்பு தீண்டி இறந்து போய் சுடுகாட்டுக்க எடுத்தச் சென்ற சுற்றத்தாரை அமைதி செய்து விட்டு இந்த மையில் கொஞ்சம் எடுத்துக்கண்ணில் தீட்டிப்பின் தலையில் குட்டுப் போட்டு விட இறங்கி எழுந்து நிற்பான்.

## அதிரூபச்சித்து

தானென்ற பருதிவிம்பச் சித்துச் சொன்னேன்
        தயவான மதிரூபச்சித்துக்கேளு
ஓமென்ற ஊமத்தைச் சமூலமப்பா
        உரிமையுடன் கொணடுவந்து கண்டமாக்கி
நாமென்ற பாண்டமதி லிட்டு மைந்தா
        நன்மையுடன் சவர்க்காரம் கூடச்சேர்த்து
ஆமென்று செபித்துமே குழித்தயிலம் வாங்கி
        அன்பான மேருதனில் பதனம் பண்ணே

பண்ணியதோர் தயிலமதில் சேரும்வகைகேளு
        பாங்கான அரிதாரம் கெந்தியோடு
உன்னியதோர் பாடானம் கெவுரிதானும்
        உரிமையுள்ள சரக்கைந்துந் தயிலத்தாலே
கன்னிகா மயேஸ்வரிக்குப் பூசைபண்ணி
        கல்வமதி லாட்டி நன்றாய் வழித்துக்கொண்டு
புண்ணியனே முன்சொன்ன தயிலத்தோடே
        புதுமையுடன் அரைத்தனைக் கூடச்சேரே

சேர்த்து நன்றாய் ஐங்கோலத் தையலம் சேர்த்து
        திறமான பீங்காந்தன் தாழிக்குள்ளே
போற்றி நன்றாயச் சேர்த்தூவி முகத்தில் வைக்க
        பூரணத்தின் கிருபையினால் தயிலம் தொட்டு
பார்த்துமிக முடியாது ஐயாகேளு
        பார்த்ததனிலே மனிதருக்கு கொடுக்கும் போலே
காத்துமிகக் கண்ணிவிட்டுப் பார்க்கும்போது
        கயிலாச மீதோவெனவே கருதுவானே

வானென்ற நாவிலிட்டுப் பார்க்கச் சொல்லு
        மதிகோடி அவன்கண்ணில் மகிழ்;ந்துகாணும்
தேனென்ற லாடமதில் போட்டுப்பாரு
        சிவசிவா என்னநசொல்வேள் மண்ணும்விண்ணும்
கோனென்ற குருவருளால் தலைதானோரும்
        குருவான பதத்தினுட வீடுந்தோறும்
ஏனென்று பேசுமடா பேய்பூதங்கள்
        என்னசொல்வேன் மறியினுட சிவப்பு தானே

பொருள்

ஊமத்தம் சமூலம் கொண்டு வந்து துண்டுதுண்டாக நறுக்கிப் பாண்டத்திலிட்டு சவர்க்காரம் கூடச் சேர்த்துக் குழித்தைலம் வாங்கி அரிதாரம், கெந்தி பாடாணம், கெவுரி ஆகிய சரக்குகளைத் தைலத்தில் சேர்த்து மகேஸ்வரிக்குப் பூசை செய்து கல்வத்திட்டு ஆட்டி மீண்டும் முன் சொன்ன தைலத்தைக் கூட்டி ஐங்கோலத் தைலம் சேர்த்துப் பீங்கான் தாழியில் வைத்துச் சூரியனில் வைத்துப் பின் கண்ணில் தீட்டிக் கொண்டு பார்க்கக் கயிலாயக் காட்சி தோன்றும், லலாடத்திலிட்டுப் பார்க்க விண்ணும் மண்ணும் பரத்தின் வீடும் மற்றும் பேய் பூதங்கள் அனைத்தும் தோன்றும்.

## சர்வகுலச்சித்து

தானவனா இன்னமொரு சித்துக்கேளு
        தயவான அதிரூபச் சித்துச் சொன்னேன்
கோனருளால் சர்வகுலச் சித்துகேளு
        குருவான புலத்தியனேக தேதுவா
மானான வமத்து மருளாமொன்று
        வகையான கோரக்கர் மூலியொன்று
தேனான அண்டமொன்று நிலவுபொன்று
        சிவசிவா சிவனார்தம் வேம்புகூட்டே

கூட்டுவா யைந்துமோ ரெடையாய்த் தானும்
        கூர்மையுடன் கண்டமதாய் நறுக்கிக் கொண்டு
நாட்டுவாய் பாண்டமதி லிட்டு விடடு நன்றாய்
        நன்மையுடன் குழிதம்தைலம் நன்றாய் வாங்கி
தேட்டமுடன் சாதிக்காய் சாதிபத்திரி
        திடமான மதனப்பூ காந்தநாலும்
நாட்டியாய்ப் பொடித்து நல்ல தயிலத் தூட்டி
        தயங்காமல் ரவிமுகத்தில் வைத்துப் போற்றே

போற்றுவது பீங்கானில் தரணி தன்னில்
    புதுமையுடன் வைத்து நல்ல குருவைப் போற்றி
சாற்றுவது பூரணத்தைத் தியானம் பண்ணி
    தயவாகக் குன்றியெடை எடுத்துக் கொண்டு
பூட்டுவாய் தான்திறந்து பசியைப்போற்றி
    பூரணத்தை நோக்கிநீ கொண்டாயானால்
மாற்றமுள்ள உருப்பேதம் வகையாய்த் தோற்றும்
    மாநிலத்தில் வெகுபுதுமை மனதில்காணே

பொருள்

ஊமத்தை, கோரக்கர் மூலி அண்டம், நில உப்பு, சிவனார் வேம்பு இவை ஐந்தையும் சம அளவாக எடுத்து, சிறுக நசுக்கி, அதைக் கொண்டு குழித்தைலம் இறக்கி சாதிக்காய், சாதி பத்திரி, மதன காமப்பூ, காந்தம், இவை நான்கும் பொடித்து, மேலே குறிப்பிட்ட தைலத்தில் கலந்து வெய்யிலில் வைத்து பின்னர் பீங்கானில் சேமித்து வைத்துக் கொண்டு தேவை ஏற்படும் பொது குன்றி மணியளவு வாயில் போட்டுக்கொள்ள உருவ வேறுபாடு தோன்றும்.

## மோகினிச்சித்து

காணவே சர்வகுலச் சித்துசொன்னேன்
கருணை பெற மோகினியின் சித்துகேளு
பேணவே ஆவாரை சமூலம் கொண்டு
பிரியமுடன் உலர்த்தியது கண்டமாக்கி
தோணவே பாண்டமதி லிட்டுநல்ல
சுருக்கான காரமுடன் சாரம்போட்டு
ஊணவே கல்லுப்புச் சத்தும் போட்டு
உடன்சேர்த்துக் குழித்தைலம் வாங்குவாங்கே

வாங்கினிதோர்ஜங்கோலத் தயிலம் சேர்த்து
மைநட்தனே பீங்கான தன் தரணிதன்னில்
பாங்கான புனுகுடனே ரோசனை சேர்த்து
பதிவான தயிலமதில் சேர்த்துக் கொண்ட
தீங்கில்லா குருபதத்தை தொழுதுபோற்றி
சிவசிவா ரவிமுகத்தில் வை;ததுப் பாரே
ஆங்கவனே தயிலமிது இறுகி நல்ல
அரகரா வாசமென்ன சொல்லப்போமோ

வாசமுள்ளமையெடுத்து தியானம் செய்து
        மைந்தனே லாடமதில் திலகம்போட்டு
நேசமுள்ள ரணகளறத்தில் போகுவையானால்
        நின்றவர்கள்லெல்லோரும் குருவேஎன்று
பாசமுடன் நல் வணக்கம் செய்து
        பருவமுடன் புத்திகள் கேட்பாரையா
தோசமுள்ளபகையினருமே மோகம் செய்வார்
        துடியான சத்துருவும் வசியமாமே

<u>பொருள்</u>

ஆவாரையின் மூலம் எடுத்து உலரவைத்து துண்டு துண்டாக நறுக்கி, அத்துடன் காரம், சாரம், கல்லுப்பு சேர்த்து, குழித்தைலம் இறக்கி, அத்துடன் ஐங்கோல தைலம் சேர்த்து பீங்கானில் சேகரித்து, புனுகு , கோரோசனை சேர்த்து வெய்யிலில் வைக்க தைலம் இருகிப்போகும், நல்ல வாசம் வீசும், தியானம் செய்து மையை லலாடத்தில் தடவிப் போர்க்களம் செல்ல எல்லோரும் குருவே வணக்கம் என்று சொல்லி வணங்கி நிற்ப்பர். பகைவரும் வசியமாவர்.

## விகுர்தரச்சித்து

காணவே விரோதமாய்ச் சித்துசொன்னேன்
 கருவான விகுர்தரசச் சித்துகேளு
பேணவே சிவன்வேம்பு சமூலம் கொண்டு
 பிரளவே நொறுக்கி அதில் வகையைக்கேளு
தோணவே அண்டமொடு பிண்டம்கூட்டி
 கருக்காகப் பாண்டமதுவிட்டுக் கnhண்டு
நாணவே குழித்தயிலம் வாங்குவாங்கு
 நன்மையுள்ள தயிலமதில் வகையைக்கேளு

வகையென்ன கற்பூரச் சுண்ணம்போட்டு
 மத்தித்து ரவிமுகத்தில் வைத்துப்போற்றி
திகையாதே தயிலமதை நாவில் தீத்தி
 செப்பக்கேள் தின்பண்ட மெல்லாந்தின்க
நகையாதே தின்றதெல்லாம் இனிக்கம்பாரு
 நன்மையுள்ள செலங்களெல்லாம் அமிர்தமாகும்
பகையான பகைகளெல்லாம் தன்மையாகும்
 பக்குவமாய் இக்கருவைப் பகரொண்ணாதே

பொருள்

நூறு வயதைக் கடந்த வேப்ப மரத்தின் வேரினைக் கொண்டு குழித் தைலம் எடுத்து அத்துடன் கற்பூர சுண்ணம் சேர்த்து வெய்யிலில் வைத்து அதனை நாவில் தடவிக் கொண்டு எதைப் பருகினாலும் இனிக்கும். நஞ்சு கூட அமிர்தம் போலிருக்கும். இதனை விகுதரச்சித்து என்றும் இதை யாருக்கும் சொல்லாதே என்றும் சொல்கிறார் அகத்தியர்.

**<u>காரூபச்சித்து</u>**

ஒண்ணான விகுர்தரச் சித்து சொன்னேன்
        உத்தமனே காரூபச்சித்துக் கேளு
கண்ணான கருநெல்லிப்பட்டை வாங்கி
        கருவான ஆவரையின் பட்டைகூட்டி
விண்ணான அடிமடியம் கூடச்சேர்த்து
        விசையாகப் பாண்டமதி லிட
பண்ணான குழித்தயிலம் பதமாய் வாங்கி
        பக்குவமாய்ப் பீங்கானில் பதனம் பண்ணே

<u>பொருள்</u>

கரு நெல்லிப் பட்டை, ஆவாரம் பட்டை சேர்த்து அடிமுடியும் கூடச் சேர்த்து குழித்தைலம் இறக்கி அதனுடன் புனுகு, கோரோசனையும் கூடச் சேர்த்து சிமிழில் சேமித்து அதை நாவில் தடவினால் எதை தின்றாலும் இனிக்கும்.

## அன்புநிலைச் சித்து

இயம்பியே காரூபச் சித்து சொன்னேன்
        இன்பமுள்ள அன்புநிலைச் சித்துக்கேளு
நம்பியதோர் கஞ்சாவின் வித்துவாங்கி
        நன்றான மதனப்பூ நாலுக்கொன்று
செயம்பறெவே மத்தினுட வித்துநேராய்
        செப்புகிறேன் சாதிக்காய் பத்துககொன்று
மயம்பெறவே அண்டம் ரண்டுமண்டம் ஒன்று
        மகத்தான கற்பூரம் பத்து;ககொன்றே

ஒன்றாகக் கூட்டியதோர் சரக்கெல்லாம்
        உடன்சேரு கருவாயின் பட்டைதன்னை
நன்றான பாண்டமதி லிட்டு நன்றாய்
        நாயகியைத் தொழுதுகுழித் தைலம் வாங்கி
குன்றாத ஐங்கோலத் தைலம் நேராய்
        குப்பிதனி லேயடைத்துப் பதனம் பண்ணி
மன்றான தில்லைநடுச் சபையில் நின்று
        மனதினுட செயலறிந்hத தயிலம் கொள்ளே

சொல்லுகிற சொற்களெல்லாம் வேதமப்பா
        துன்பமற்ற புலத்தியனே சொல்லக்கேளு
நல்லுறவா மிந்நூல்பன் னிரண்டுநூறு
        நன்மையுடன் பார்த்தவர்க்கெல்லாம் சித்தே
கொள்ளுவதுக் குள்ளாக அண்டம் காணும்
        குறிப்பாக அண்டமதி லன்பு நி;ற்கும்
விள்ளுறதுக் குவமையில்லை அண்டக்கூறு
        வேதாந்த வேதமடா விமலன் காணான்

பதனமுள்ள தயிலமதில் வகையாயக் கேளு
        பக்குவமாயப் புழுகுடனே ரோசனை கூட்டி
விதனமில்லாத் தயிலமதை நாவில் தீத்தி
        வேண்டிதோர் பதார்த்தமெல்லாம் தின்றாயானால்
அதனமதாயப் புளிப்பாகு மப்பா சொன்னேன்
        அதிகயினிப் பானதுவும் புளிப்பாய்ப போகும்
இதமான தயிலமப்பா பதனம் பண்ணி
        இந்திரசலத் தொழிலை இயம்பிடாயே

பொருள்

கஞசாவின் விதையுடன் அதன் எடைக்கு நாலுக்கு ஒன்று மதனப் பூவும் , கஞ்சாவின் எடைக்கு சமனாக மதன் வித்தும், கஞ்சாவின் எடைக்கு பத்துக் கொன்று சாதிக்காயும் அண்டம் இரண்டு, அண்டம் ஒன்று, கஞ்சாவின் எடைக்கு பத்துக் கொன்றுகற்பூரமும் சேர்த்து, கருவாய் படைக் குளித் தைலம் இறக்கி அதன் சம அளவு ஐங்கோலத் தைலம் சேர்த்து. சிமிழில் சேகரித்து வையத்து தில்லை நடுச் சபையில் நின்று இதை தின்றால் அண்டக் காட்சிகள் எல்லாம் தெரியும்.

## விசையபரச்சித்து

சித்தான அன்புநிலைச்சித்து சொன்னேன்
சிவசிவா விசையபரச்சித்துக்கேளு
முத்தான ஙை;கோலத் தயிலம் வாங்கி
மூதண்ட பூரணமும் கூடச் சேர்த்து
வித்தான மிளகுலித்து தயிலம் கூட்டி
விசையான ரவிமுகத்தில் வைத்துப் போற்றி
பததான தயிலமதைப் பதனம் பண்ணு
பரமான தயிலத்தின் வகையைக்கேளு

கேளப்பா தயிலமதை விரலிற்றொட்டு
கிருபையுட னதைத் தேய்த்து மோந்துபாரு
வேளப்பா எரித்தநெற்றிச்சுடரே தோன்றும்
வினாவுடனே கடுகளவு கொண்டாயானால்
கோளப்பா வொன்றுமில்லை உருவுகாணார்
கூர்மையுடன் பார்ப்பவர்க்குத் தீபம் போலாம்
மாளப்பா மனுக்கோடி காலில் வீழ்ந்து
அன்பாகக் கருக்கேட்பார் சொல்லிடாதே

பொருள்

ஐங்கோலத் தைலம் எடுத்து மூதண்ட பூரணமும் கூட சேர்த்து மிளகு வித்து தைலம் சேர்த்து வெய்யிலில் வைத்து சிமிழில் சேகரித்து தேவைப்படும் போது விரல் நுனியில் தைலத்தில் தொட்டு தேய்த்து நுகர நெற்றி சுடர் தெரியும் யோகம் செய்பவர்களுக்கு சிறப்பானது .

## செயரூபச்சித்து

பாரப்பா விசயபரச் சித்துச் சொன்னேன்
	பாங்கான செயரூபச்சித்துக்கேளு
ஆரப்பா அறிவார்கள் அண்டங்காக்கை
	அன்பான அதனுடைய முட்டைதானும்
நேரப்பா அமுதமுள்ள நிலத்திற்றானும்
	நீமகனே திலகமிட்டுப் பார்த்தாயானால்
காரப்பா கருநிறம்போல் முட்டை தோன்றும்
	கருவான முட்டை தனைக் கருவாய் வாசங்கே

வாங்கியதோர் முட்டைதனை உடைத்துப்பாரு
	மகத்தான நீரப்பா என்னசொல்வேன்
தாங்கியதோர் நீரெல்லாம் தயிலமப்பா
	தடிப்பான பீங்கானில் பதனம் பண்ணி
ஓங்கியதோர் ரசமுகத்தில் வைத்துப்பாரு
	ஓகோகோ தயிலமது என்ன சொல்வேன்
தீங்கில்லாத் தயிலமதில் கோடிவித்தை
	சித்துமிக வாடினதோர் செயலைக்கேளே

கேளப்பா புலத்தியனே ஐயா ஐயா
	கெடியான தயிலமதில் வகையைக்கேளே
கோளப்பா ஒன்றுமில்லை கண்ணாடி தன்னில்
	குணமான ரவிமதியாங் காந்தியுண்டு
ஆளப்பா சந்திரசூரியகாந் தத்தில்
	அப்பனே கண்ணாடி உண்டு உண்டு
நாளப்பா நாளறிந்து கண்ணாடி வாங்கி
	நன்மையுள்ள தயிலமதில் பூசிப்பாரே

பாரப்பா சூரியகாந் தத்தையப்பாற்
        பலவாக நினைத்ததெல்லாம் கண்ணில் தோன்றும
நேரப்பா பார்த்துவிடு சந்திரகாந்தத்தை
        நேர்மையுள சிவதலங்கள் கண்ணில் காணும்
காரப்பா ரெண்டு கண்ணாடிக்குள்ளே
        காரணமாம் கோடிவித்தை அதனில் காணும்
கூரப்பா வித்தைஎன்ன வென்றுகேட்டால்
        கூர்மையுள்ள புலத்தியனே இன்னம் கேளே

கேளப்பா கூடாரமென்று போட்டு
        கேடியான ரவிகாந்த மதனுள் வைத்து
கோளப்பா  வாராமல் திரையொன்றிட்டு
        கூட்டமதில் வந்து நின்று கூகூவென்று
ஆளப்பா இதுக்குள்ளே ஈஸ்வரனைப் பாரு
        அன்பான  தீபமுடன் கோசமும் பாரு
நூலப்பா திரைவாங்கி உள்ளே பாரு
        நோடிக்குமுன்னே சாம்பசிவன் தெரிசனையே காணும்

காணுமடா நினைத்தவண்ண மெல்லாம் காணும்
        காத்துநின்ற சனங்களதி சயமாயப் பார்ப்பார்
தோணுமடா வெகுகோடி சித்துத்தானும்
        தோணாது தோணுமடா என்ன சொல்வேன்
பேணுவாய் திரைபோட்டு மைந்தாகேளு
        பிரியமுடன் ரவிகாந்த மப்பால் வைத்து
ஊணுவாய் மதிகாந்தந் தன்னைவைத்து
        ஊத்தமனே திரைநீக்கிப் பார்க்கச் சொல்லு

சொன்னவுடன் அனைவோரும் பார்ப்பாரப்பா
        சுருதிமுனை பார்தத்துவும் கனாப்போலாகும்
நன்னயமாய் நின்றவர்க ளெல்லோருமபக்பா
        நகைத்திடுவா ரதிசயத்தைக் கண்டுகண்டு
உண்மையின்னம் சொல்லுகிறே னிந்திரசாலம்
        உரிமையுள்ள புலத்தியனே ந்னறாயக்கேளு
தன்மையென்ற பேறெடுத்தா லெல்லாஞ் சித்து
        தயவில்லா சீடரை நீ தள்ளு தள்ளே

<u>பொருள்</u>

அண்டங் காக்காய் முட்டைய வாங்கி உடைத்து பார்க்க உள்ளே தைலம் தோன்றும், அதை பீங்கானில் வார்த்து வெய்யிலில் வைத்து சேகரித்து தேவைப்படும் போது சூரியக் கண்ணாடியில் இந்த தைலத்தினை பூசிப் பார்க்க நினைப்பதெல்லாம் தெரியும், சந்திரக் கண்ணாடியில் இந்த தைலத்தினை பூசிப் பார்க்க சிவத்தலங்கள் எல்லாம் தோன்றும்..

## மதனகெளிசித்து

தள்ளாமல் செயரூபச்சித்து சொன்னேன்
தயவான மதனகெளி சித்துகேளு
விள்ளாமல் முன்சொன் அண்டங்காக்கை
விசுமான முட்டையுட தயிலந்தன்னில்
நல்லான ரசமதனில் சேர்த்துப் பாரு
நன்மையுள்ள தயிலரச மொன்றாய்ப் போகும்
சொல்லாமல் முன்சொன்ன ரவிகாந்தத்தில்
சுருக்கமுடன் தடவி ந்னறாய்ப்ப பாருபாரே

நன்றாகப் பார்க்கையிலே உருக்கள் பேதம்
நளினமுள்ள மலைபோல தோன்றுமப்பா
குன்றாத அணுக்களெல்லாம் மேருபோல
குறையாமல் தோணுமடா குறிப்பாய்ப் பாரு
அண்டர் தொழும் ரசம்சேரத் தயிலந்தன்னை
அணுவளவு நாவதனி லடக்கம் பண்ணி
பெண்டான பெண்களுட னனுபவித்தால்
பிரியமுட னாயிரம்பெண் மருவலாமே

மருவினால் விந்ததுவும் தம்பனமே யாகும்
மகத்தான தம்பனந்தா னெகிழவென்றால்
குறியான புளியிலணு வளவு கொண்டால்
கொப்பளிக்கும் காமலசம் என்ன சொல்வேன்
தருவான தருக்கோடி ஈந்திட்டாலும்
தம்பனத்தின் புதுமையைச் சாற்ற வேண்டாம்
திருவான மதனகெளிச் சித்துச் சொன்னேன்
சிவசிவா தும்பிவனச் சித்துகேளே

பொருள்

அண்டங் காக்காய் முட்டைய வாங்கி உடைத்து அதனுடன் பாதரசம் சேர்க்க தைல ரசமாகும். இந்த ரச தைலத்தை எதில் பூசிப் பார்த்தாலும் பெரிய உருவாக தோன்றும் அதன் பகுதிகளை ஆய்வு செய்ய உதவும்.

## தும்பிவனச்சித்து

சித்தான கருவிடையஞ் சொல்லப் போமா
        செயமான ரசம்சேர்ந்த தயிலந் துள்ளே
வித்தான அரிதாரம் லிங்கம் ரெண்டும்
        வேண்டியே தயிலத்தால் நன்றாயாட்டி
பத்தான மதிகாந்தந் தன்னில் தேய்த்து
        பக்குவமாயக் கண்ணாடி பார்க்கும்போது
கொத்தான ஆனைபந்தி பந்தியாய்க்
        கோடான கோடியது தோன்றும் பாரே

பொருள்

அண்டங் காக்காய் முட்டைய வாங்கி உடைத்து அதனுடன் பாதரசம் சேர்க்க தைல ரசமாகும் இந்த ரச தைலத்துடன் அரிதாரம், லிங்கம் ரெண்டும் சேர்த்து கல்வத்திலிட்டு ஆட்டி மதி காந்தம் தன்னில் தேய்த்து கண்ணாடியில் பார்க்க ஆனை  பந்தி பந்தியாக தெரியும்.

## பரிநகுலசித்து

பாரப்பா தும்பிவனச் சித்துசொன்னேன்
பாங்கான பரிநகுலச்சித்து கேளு
நேரப்பா ரசம் சேர்ந்து தயிலந்தன்னில்
நினைவாக வீரமுடன் பூரம் சேர்த்துக்
காரப்பா கல்வமதில் நன்றா யாட்டி
கனக்கவே ரவிகாந்தந் தன்னில்பூசி
சேரப்பா மறுபுறத்தில் முலைப்பால்பூசி
சிறப்பாக நீபார்க்கத் தோணும்கேளே

கேளப்பா கண்ணாடி பார்க்கும்போது
கெம்பீர மானபரி யனந்தம் கோடி
கோளப்பா வாராமல் கண்ணில் காணும்
குறிப்hகப் பார்க்க வெகு சித்துண்டாகும்
நாளப்பா நாழிகைக்கு ளனந்தஞ் சித்து
நன்மையுடட னாடவென்றா லின்னம்கேளே
நீளப்பா தன்னிலொரு சித்துக்கேளு
நிச்சயமாய் ரசம் சேர்ந்த தயிலம்வாங்கே.

பொருள்

அண்டங் காக்காய் முட்டைய வாங்கி உடைத்து அதனுடன் பாதரசம் சேர்க்க தைல ரசமாகும் இந்த ரச தைலத்துடன் வீரம், பூரம் ரெண்டும் சேர்த்து கல்வத்திலிட்டு ஆட்டி சூரிய காந்தம் தன்னில் தேய்த்து கண்ணாடியில் பார்க்க கம்பீரமான குதிரைகள் வருவது போல தெரியும்.

## நரிபரிச்சித்து

வாங்காமல் நரிபரியாய்ச் சித்துச் சொல்வேன்
    வணக்கமுடன் வாங்கின தோர் தயிலந் தன்னில்
தீங்கில்லாப் புனுகுடனே சவ்வாது சேர்த்து
    சிவசிவா மத்தித்து ரவிகண்ணாடி
பாங்காகப் பூசிநீ நிரியைப் பாரு
    பார்க்கிறதோர் குதிரையைப்போல் கண்ணில் காணும்
ஏங்காதே இன்னமொரு சித்துக்கேளு
    என்மகனே வகாரமயச் சித்துதானே.

பொருள்

அண்டங் காக்காய் முட்டைய வாங்கி உடைத்து அதனுடன் பாதரசம் சேர்க்க தைல ரசமாகும் இந்த ரச தைலத்துடன் புனுகு ஜவ்வாது ரெண்டும் சேர்த்து கல்வத்திலிட்டு ஆட்டி சூரிய காந்தம் தன்னில் தேய்த்து பார்க்க நரிகள் குதிரைகளாக தெரியும்.

## வகாரமயச் சித்து

சித்தென்ன ரசம்சேர்ந்த தயிலம் வாங்கி
        செம்மையுள்ள லிங்கமதை ஆட்டிக்கொண்டு
முத்தான மதிகாந்தந் தன்னில் தேய்த்து
        மூர்க்கமுள்ள சமுத்திரத்தைப் பார்த்தாயானால்
வித்தான மச்சங்கள் விதவிதமாய்த்தோன்றும்
        பத்தாசை யாகநீ பார்த்தாயானால்
பலகோடி சீவசெந்தைக் காலாமே.

காணலாம் கண்கொள்ளாக் காட்சியெல்லாம்
        கருவறியா மானிடர்க்கு கருத்தங்கேது
தோணவே சற்குருவை யறிந்தாயானால்
        தொல்லுலகி லவன்சுத்த யோகியாகும்
பேணலா மிச்சலம் பிலத்துப் போகும்
        பிலத்தபுத்தி அறிவானால் பேணிப்பாரு
பூணலாம் செகசால மின்னம்கேளு
        புத்தியுள்ள புலத்தியனே பொறுமையோனே.

பொருள்

அண்டங் காக்காய் முட்டையை வாங்கி உடைத்து அதனுடன் பாதரசம் சேர்க்க தைல ரசமாகும் இந்த ரச தைலத்துடன் லிங்கத்தை சேர்த்து கல்வத்திலிட்டு ஆட்டி சந்திர காந்தம் தன்னில் தேய்த்து சமுத்திரத்தை பார்க்க மீன்களின் வகைகள் உட்பட இருக்கும் எல்லா மீன்களும் தோன்றும்.

## சாத்துவிதச்சித்து

பொறுமையுள்ள புலத்தியனே ஐயாகேளு
புத்தியுள்ள வகாரமயச் சித்துச் சொன்னேன்
வறுமையெல்லாம் தானகற்றும் சாத்துவிதச் சித்து
வகையறியச் சொல்லுகிறேன் மைந்தாகேளு
கருமையுள்ள கரும்பூனை உச்சிவெள்ளை
கண்கள் ரெண்டும் பச்சையடா மெத்தஉண்டு
உரிமையுடன் கொண்டுவந்து பித்துவாங்கி
உள்ளதெல்லாம் தயிலமதாய் வடித்துக் கொள்ளே.

கொண்டதொரு தயிலமதில் பித்துச் சேர்க்க
கூர்மையுடன் சிவந்து மிகப் பச்சையாகும்
விண்டதொரு தயிலமதைப் பரணி தன்னில்
வெகுதாப மோகமதாய்ப் பதனகம் பண்ணி
அண்டர்தொழும் மய்யதனைக் கையால் தொட்டு
அனலெழும்பத் தேய்த்துநல்ல தாழம் ப+வாங்கி
துண்டுதுண்டாய்க் கசக்கிப் பிழிந்தாயானால்
தொலையாத செலமெல்லாம் ரெத்தமாமே.

பொருள்

கரும் பூனையின் உச்சி வெள்ளை, இரண்டு கண்கள், பிச்சு இவைகளை எடுத்து தைலம் இறக்கி பரணில் பதனம் செய்து அதை கையால் தொட்டு தாழம் பூவைக் கையால் கசக்கிப் பிழிய சாறு எல்லாம் ரத்தம் போல் வழியும்.

## தாம்பிரச் சித்து

ஆறப்பாச் சாறுவிதச் சித்து சொன்னேன்
அருள்பெருகும் தாம்பிரத்தின் சித்துக்கேளு
நாமப்பாச் சொல்லுகிறோ மாதியந்தம்
நடுவணையால் தயிலமதை இறக்கிக்கொண்டு
தாமப்பா வீரனைத்தான் தயிலத்தாலே
தானரைத்துத் தயிலமதல்குழப்பிக்கொண்டு
போமப்பா ரவியில் வைக்க வீரனுட சீலன்
புதுமையதாய் தயிலமது சிவந்து போமே.

சிவந்ததொரு தயிலமதைப் பதனம் பண்ணி
சிவாசிவா துரிதநிலந் தயிலமூட்டி
சிவந்ததொரு சீலையிலே தயிலமூட்டி
தீபமது தான்பொருத்தி விளக்கில்போட்டு
சிவந்ததொரு தாம்பிரத்தின் கிண்ணத்துள்ளே
தீபம் வைத்துத் தானாகத் தீபமேற்றி
பவந்த விழத் தண்ணீரில் துவைத்துப்பாரு
பார்க்கையிலே தங்கநிறம் அதிகந்தானே.

தானப்பா புளித்தசலந் தன்னில் போட்டு
தப்பாமல் தாம்பிரம்போலிருக்குமப்பா
வீணப்பா அல்லவிது இந்தவித்தை
வேந்தரெனு மரசரிடம் விளையாட்டாகும்
கோளப்பா குருவருளால் விளைந்த வித்தை
குணமான புலத்தியனே கூர்ந்துபாரு
பேணப்பா தவசுகளை விட்டிடாதே
பேணிப்பார் சித்துவித்தை யனந்தமாமே.

பொருள்

கரும் பூனையின் பிச்சு எடுத்து தைலம் இறக்கி வீரத்தை சேர்த்து கல்வத்திலிட்டு அரைத்து வெய்யிலில் வைக்க சிவந்த நிறமாகும். இதை சிவந்த துணியில் வடிகட்டி காயப்போட்டு தாமிரக் கிண்ணத்தில் தீபம் வைத்து ஏற்றி தண்ணீரில் துவைத்து பார்க்க தங்க நிறமதிகமாகும். புளித்த நீரில் போட்டு பார்த்தால் தாமிர நிறமாகும்.

## சலபேதிச் சித்து

ஆமப்பா தாம்பிரத்தின் சித்துசொன்னே;
அன்பான செலபேதி சித்துக் கேளு
நாமப்பா சொல்லுகிறோம் சாரந்தன்னில்
நல்லசுண்ணம் தனில்விட்டுப் பனியில் வைக்க
தாமப்பா சொல்லுகிறோம் சநல்தா னூறும்
தன்மையுள சலமதனா லிங்கமாட்டி
காமப்பால் சலந்தனில் கரைத்துக் கொண்டு
கருவெடுத்து ஆடுதற்குக் கருத்தைக்கேளே.

கருத்தென்ன செம்புகளைச் சலத்தினுள்ளே
காசினியோர் தானறியத் தோய்த்துக் கொண்டு
பெருத்ததொரு நெருப்பதனில் வாட்டினாக்கால்
பிலமான செம்பதுவும் வெள்ளிபோலாம்
உருத்துடனே மேருதனில் வைத்துவாட்ட
உள்ளசெம்பு பொய்யாது நிசந்தான் சொன்னோம்
திருத்தமுள்ள ராசரிடம் ஆடும்வித்தை
செப்பினேன் புலத்தியனே உனக்காம்பாரே.

பொருள்

சாரத்தை சுண்ணத்தில் கலந்து பனியில் வைத்தால் சலம் ஊறும். இந்த சலத்துடன் லிங்கம் சேர்த்து அரைத்து நீர்விட்டு குழைத்து அதில் செம்பை தொய்த்தெடுத்து நெருப்பில் வாட்டினல் செம்பு வெள்ளியாகும்.

## அசுபதியின் சித்து

சித்தான சலபேதிச் சித்து சொன்னேன்
        சிவசிவா அசுபதியின் சித்துகேளு
பித்தான பித்தப்பா குதிரைப் பித்து
        வேணியே தானெடுத்து வைத்துக்கொண்டு
முத்தான ரேண்டத் தயிலஞ் சேர்த்து
        மூர்க்கமுள்ள அரிதாரக்குருவும் சேர்த்து
வித்தார மாகவே ரவியில் வைத்தால்
        விதமான மை போக்கும் சொன்னார்தானே

தானென்ற மையெடுத்து திலகம் போடு
        தப்பாமல் குருபரத்தில் சார்ந்து நின்றால்
தேனென்ற தன்முகந்தான் குதிரைமுகமாகும்
        தெளிவாகப் பார்த்தோர்க்கு மப்படியேயாகும்
வீணென்ற வீண் பயல்க ளதிசயமாய்ப்ப பார்ப்பார்
        வித்தார மாகநீ மறைவில் நின்று
கோனென்ற அமிர்தத்தால் திலகம்தேய்க்
        குறிப்படனே தன்முகமாய்க் காணும் காணே.

பொருள்

பொருள்குதிரைப் பிச்செடுத்து பேரண்டத் தைலமும் அரிதாரக் குருவும் சேர்த்து வெய்யிலில் வைக்க மையாகும் இதை திலகம் தீட்ட பார்ப்போருக்கெல்லாம் குதிரை முகம் போல தோன்றும்.

## சிங்க முகச்சித்து

காணவே அசுபதியின் சித்துச்சொன்னேன்
கருவான சிங்கமுகச் சித்துக்கேளு
பேணவே கடுவாயின் மண்டை வாங்கி
பிலமாகக் கருவெடுத்துத் தயிலம் பண்ணி
தேனான தயிலமதில் கடுவாய் மண்டைச்
சில்லெடுத்துத் தானுரைத்துத் திலகம் போட்டால்
நாணவே தன்முகந்தான் சிங்கமுகமாகும்
நலமான சனங்களுக்கு அதிசயமாம் பாரே

பொருள்

கருவாயின் மண்டை வாங்கி கருவெடுத்து தைலம் இறக்கி அதில் மண்டையோட்டு சில்லெடுத்து அரைத்துத் திலகம் போட்டால் பார்ப்போர்க்கு சிங்கத்தின் முகமாகத் தோன்றும்.

## ரிஷபமுகச் சித்து

பாரப்பா சிங்கமுகச் சித்துச் சொன்னேன்
        பாங்கான ரிஷபமுகச் சித்துக்கேளு
காரப்பா காட்டெருமை யார்தான் காண்பார்
        கருவான நம்மலையில் சார்பிலுண்டு
தேரப்பா அம்மலையில் சென்று காணும்
        திடமாகக் காட்டெருமைப் பித்து வாங்கி
வீரப்பா செய்யாமல் ஐங்கோலஞ் சேர்த்து
        விரும்பியே ரவிமுகத்தில் வைத்துப் போற்றே

போற்றப்பா மையதனைத் திலகம் போட்டு
        புதுமையுடன் வெளியேறி நின்றமையானால்
மாற்றப்பா தன்முகந்தான் காளைமுக மாகும்
        மாநிலத்தில் மானிடர்க்கு மதிசயமாய்த் தோன்றும்
காற்றப்பா மறைவில் நின்று திலகமதை யழித்துக்
        கண்காண வெளியேறி நின்றாயானால்
தோற்றமுள்ள தன்முகந்தான் நிசமுகமாய்த் தோன்றும்
        சுருதிமுடி வானதிந்த செய்திதானே

பொருள்

காட்டெருமை பிச்சு வாங்கி அத்துடன் ஐங்கோலத் தைலம் சேர்த்து சூரியனில் வைக்க மையாகும் இதை திலகமாக தேட பார்ப்போருக்கு ரிஷப முகமாக தோன்றும்.

## பரமபரச்சித்து

வானெ;ற சித்துமிகச் சித்து சொன்னேன்
        வரிசையுள பரமபரச் சித்துக் கேளு
கோனென்ற கரும்பூனைப் பித்தெடுத்துக்
        குருவான பூரணத்தில் குழைத்துக்கொண்டு
வேனென்ற கண்ணிமையில் இட்டுப் பார்த்தால்
        வெகுதூரம் பரவெளியாய் வெகுவாய்த்தோன்றும்
தேனென்ற மயேந்திரமாம் சாலவித்தை
        சேப்புமொழி தவறாமல் பாருபாரே.

பொருள்

கரும் பூனை பிச்செடுத்து பூரணத்தில் குழைத்து கண் இமைகளில் பூசி பார்க்க வெகு தூரத்தில் உள்ள காட்சிகள் எல்லாம் தோன்றும்.

## பஞ்சீகரணச்சித்து

பார்க்கவே பரமபரச் சித்துச் சொன்னேன்
பஞ்சீகரண சித்தைப் பகரக்கேளு
ஆர்க்கும் வெகு அரிதான காந்தமப்பா
அதிலூசி காந்தம் வெகு அருமையாகும்
மார்க்கதா பூசியுட காந்தம் வாங்கி
மைந்தனே அக்காந்தம் பதனம் பண்ணி
சேர்க்கைய தாய்வீடொன்று திட்டம் பண்ணி
தேரியாமல் முகட்டினிலே கட்டித்தூக்கே

தூக்கியதோர் காந்தத்தின் எதிர்கீழே
துப்பரவா இரும்பாலே பலகை சேர்த்து
தாக்கியே அதன்மேலே இருந்து கொண்டால்
தப்பாமல் காந்தியது இரும்பில்பற்றி
நீக்கியே திரையைவிட்டு உசரத்தூக்கும்
நினைவாக நீ இருந்து சாலம்பண்ணு
பாக்கியமாய்க் கண்டவர்கள் வாய்வுஸ்தம்பம்
பலிதத் சித்தனிவனாகு மெனச் சொல்வாரே.

<u>பொருள்</u>

ஊசிக்கந்தம் வாங்கி வீட்டின் மேல் வைத்து அதற்கு நேர் கீழே இரும்பாலே பலகை செய்து அதன் மேலே இருக்க அது மேலே தூக்கும் பார்ப்பவர்கள் வாயுத் தம்பன சித்து என அதிசயிப்பர்.

**<u>உத்திகருச்சித்து</u>**

வாறான பஞ்சீகரணச் சித்து;சசொன்னேன்
        வளமையுள்ள உத்திகருச்சித்துக்கேளு
நேராகப் பட்சிபோல் மரத்தால் பண்ணி
        நினைவாக  அதிலிரும்பைக் காய்ச்சிக் கொண்டு
சீராகக் காந்தத்தின் கீழ்
        சிறப்பாகப் பட்சியைநீ வைத்துப்பாரு
கூறாகக் காந்தத்தின் காந்திச் சென்று
        குறிப்பான பட்சியைத்தான் தூக்கும் பாரே

<u>பொருள்</u>

பட்சியைப்போல் மரத்தில் செய்து அதற்கு இரும்பால் கவசம் செய்து காந்தத்தின் கீழ் வைக்க மேலே பறக்கும். பார்ப்பவர்கள் அதிசயிப்பார்கள்.

## உருமறைப்புச்சித்து

பாரப்பா உத்திகருச்சித்து சொன்னேன்
பண்பான உருமறைப்புக் கருவைக்கேளு
சேரப்பா கணபதிபோல் மர்ததால் பண்ணி
திறமான இரும்பானி சிரசில் தாக்கி
நேரப்பா காந்தங் கீழ் கணபதியை வைக்க
நேராகக் காந்தியது தூக்கும் தூக்கும்
காரப்பா பிள்ளையார் அந்தரத்தில் நிற்கக்
கண்டவர்கள் அதிசயமாய்ப்ப பார்ப்பார்தானே.

பொருள்

கணபதியைப் போல மரத்தில் செய்து அதற்க்கு இரும்பால் கவசம் செய்து காந்தத்தின் கீழ் வைக்க மேலெழும்பி அந்தரத்தில் நிப்பார். பார்ப்பவர்கள் அதிசயிப்பார்கள்.

## மதுரகெளிச்சித்து

தனதாக வெற்றிமனச்சித்துச் சொன்னேன்
        சந்தோட மதுரகெளிச் சித்துக்கேளு
மனதான பூரணமு பின் கஞ்சாவும்
        மதனப்பூசாதிகக்hய் சுக்குஞ் கூட்டி
கடுகுபோ லுருட்டியது தன்னாலட்டி
        சினமான புல்லருக்கு ஈந்தால் மைந்தா
சிவசிவா அவனுடைய கூத்தைப் பாரே

கூத்தென்ன அவன்தேகம் உள்ளமட்டும்
        கொண்டாடித் தான் திரிவானப்பாகேளு
மாற்றமென்ற செயநீரைக் கொண்டால் மைந்தா
        மயக்கமற்றுத் தன்சுரணை யப்பால் காணும்
ஏற்றமென்ற மதுரகெளிச் சித்து சொன்னேன்
        என்மகனே மனதடங்கியாடுயாடு
சாற்றுமென் மாமோகச்சித்துக்கேளு
        தன்மையுள்ள புலத்தியனே அறிவுள்ளானே

பொருள்

பூரணம், அபின், கஞ்சா, மாதனப் பூ, சாதிக்காய், சுக்கு முதலியன வகைக்கு ஒன்றாகக் கூட்டி ஐங்கோலத் தைலம் இறக்கி அதை கல்வத்திலிட்டு ஆட்டி கடுகு போல உருட்டி சேமித்து வைத்து இதை புல்லருக்கு கொடுக்க கொண்டாட்டமாய் திரிவர். செய நீரைக் கொடுக்க சுய நினைவு பெறுவார்.

## மாமோகச் சித்து

அறிவுள்ள புலத்தியனே சொல்லக்கேளு
அன்பாகப் பானைதனில் தண்ணீர்விட்டு
குறியான அமுதுபடி எடுத்துக்கொண்டு
கொட்டுவாய் பானைதனி விரும்புபோட்டு
விரிவாகத் தீமூட்டி அமுது செய்து
வெந்திறக்கி நடுவீட்டில் பதிய வைத்து
தரியாத காந்திதனை முகட்டில் கட்டி
தயவான தேவிதனைப் போற்றுவாய்

போற்றியதோர் பானை தனைக் காந்தி தூக்கும்
புகழாத நின்றவர்க ளதிசயிப்பார்
தேற்றியதோர் தேவிதான் பானை தூக்க
செய்தவித மென் சொல்வேன் திறந்தானப்பா
நாற்றிசையும் கண்டனடா இந்தவித்தை
நாதாந்த மகிமைதனை சொல்லப்போமோ
பூட்டியதோர் பூட்டெல்லாம் சாலவித்தை
புகலாதே ஒருவருக்கும் புதுமைதானே

<u>பொருள்</u>

பானையில் தண்ணீர் விட்டு அரிசியை இரும்புடன் கலந்து போட்டு சோறு ஆக்கி நாடு வீட்டில் வைத்து காந்தத்தை முகட்டில் கட்டிவைக்கப் பானை தூக்குவதைக் காணலாம். பார்ப்பவர் அதிசயிப்பர்.

## அதிமோகச்சித்து

புதுமையென்ற மாமோகச் சித்து சொன்னேன்
பொருந்துகின்ற அதிமோகச் சித்துகேளு
மெதுவாக கவுதும்பை சாபம் தீர்த்து
மென்னரவி தனைத்தொழுது வேரை வாங்கி
மதுவான பால்தனில் திலகம் போட்டு
மைந்தனே கண்டவர்கள் மோகம் செய்வார்
சதுவான சமர்தினத்தில் சென்றாயானால்
தாகமுட னதிமோக மாவார்பாரே.

பொருள்

கவுதும்பை செடியைச் சாபநிவர்த்தி செய்து அதன் வேரை எடுத்து பால் விட்டு அரைத்து திலகமாக தீட்டினால் கண்டவர் மயங்குவர்.

## விதனம் வரும் சித்து

பாரப்பா அதிமோகச் சித்துச் சொன்னேன்
        பரதவிக்க விதனம் வரும் சித்து கேளு
ஆரப்பா அறிவார்கள் கீரிப்பூண்டு
        அன்பாகத் தனைப்பறித்து மைந்தாகேளு
வீரப்பா செய்த உடன் கட்டையேற
        விரும்பிமன விருப்பாகி வயிராக்கியம் செய்வாள்
சேரப்பா தனைப்பிடுங்கித் தேய்த்தாயானால்
        சேர்ந்துமிக அழுதிடுவாள் பாருபாரே.

பொருள்

கீரிப் பூண்டை பறித்து வைராக்கியத்துடன் இருக்கும் பெண்ணுக்கு தேய்த்தால் பிரிய மணம் வராது அழுவாள்.

## சாலசித்து

பார்க்கவே விதனம் வருசித்துச்சொன்னேன்
பண்பான சால சித்து மகிமை கேளு
ஏர்க்கவே விளாம்பிசினி பொடியதாக்கி
என்ன சொல்வேன் குமிழில்லாப் பலகை வைத்து
சேர்க்கையுடன் பலகையின் மேல் பொடியைத் தூவி
திறமாகக் கால்நனைத்து அதுமேல் வைத்து
மார்க்கமடன் நடக்கவென்றால் சொல்லக்கேளு
மைந்தனே உலருமட்டும் நின்று கொள்ளே

நின்று அட்டகாசம் பண்ணிப் பசப்பி மைந்தா
நிற்கையிலே காலோடே பலகையொட்டி
மன்றுதனில் நடனமதாய் நிற்கும்போது
மைந்தனே பார்த்தவர்கள் புதுமையெ;னபார்
நன்று நன்று குமிழில்லாப் பலகைமேல்
நடக்கிறது அதிசயந்தா னையாவென்பார்
விண்டிடாய் விளாம்பிசினி அதிசயந்தான்
விரிவாகச் சலம்பட்டால் கழன்றுபோமே

பொருள்

விளாம் பிசினை பொடியாக்கி குமிழ் இல்லாத பலகைச் செருப்பில் தூவி காலை நனைத்துக் கொண்டு அதில் வைத்தால் ஒட்டிக் கொள்ளும் நடனம் ஆடினாலும் கழறாது. தண்ணிரில் கழுவினால் கழறும்.

## சலஸ்தம்பன சித்து

போமப்பா சாலமென்ற சித்துச்சொன்னேன்
பூட்டுறேன் சலஸ்தம்ப சித்துதானும்
நாமப்பா சொல்லுகிறோம் வெண்புலித் தோலையா
நன்மையுள்ள நம்மலையில் மெத்த உண்டு
அமப்பா சொல்லுகிறும் புலிதானென்பான்
அருமையுள்ள புலயதுவு மானைக்கண்டால்
ஓமப்பா ஆங்கார முள்ளடக்கி
உருமிக்க மாட்டாது குலத்தின்வாறே.

வாரான அப்புலியை மலைவேட ரப்பா
மாங்கிஷத்தி னிச்சையதா யடிப்பாரப்பா
வீறான மாங்கிஷத்தி னுருசி சொல்ல
வேண்டினே னதுக்குநிகர் இல்லை இல்லை
நாறாது புழுக்காது என்னாளுந்தான்
நல்லதொரு நெய்க்கட்டி யாகுமப்பா
பாராமல் மலைவேடர் தோல்சதை வைத்து
பக்கவமாய் சித்தருக்கு ஈவார்பாரே.

பாரப்பா அத்தோலைப் பதனம் பண்ணி
பக்குவமாய் சாலவித்தை பகரக்கேளு
நேரப்பா நிலையாத நீர்மேற்போட்டு
நீயிருக்க நிலையாத அமிழாது ஆசனத்தில் வன்மை
தேரப்பா அதிலிருந்த அட்டகாசம்
செப்பியே விளையாடா விளையாட்டெல்லாம்
ஆரப்பா அறிவார்களிந்த வித்தை
அதிகமாஞ் சலஸ்தம்ப மதிகந்தானே.

பொருள்

வெள்ளைப் புலியின் தோலை நீரின் மேல் போட்டு மேலே ஆசனம் போட்டு அமர நீரில் மூழ்காது.

## அக்கினி ஸ்தம்பனச்சித்து

தானென்ற சலஸ்தம்பச் சித்துச் சொன்னேன்
        தயவான அக்கினியின் சித்துகேளு
பானென்ற பானைதனில் சலத்தைக்காய்ச்சி
        பார்க்கவொணாச்சூடு கொண்ட வெந்நிர் தன்னில்
தேனெ;னற வெண்புலியின் சதை ரசத்தை
        தேகமுழுதும் தடவி வெந்நீர் விட்டால்
வானென்ற அமுதத்தின் குளிர்ச்சியாகும்
        வையகத்தோ ரதிசயிக்கு மார்க்கமென்றே

பொருள்

வெள்ளைப் புலியின் சதை ரசத்தை உடல் முழுவதும் பூசிக் கொண்டு கொதிக்கும் வெந்நீரை விட்டால் கூட குளிர்ச்சியாக இருக்கும்.

## வாடைச்சித்து

வளமான பேதனத்தின் சி;த்துசொன்னேன்
        மகத்தான வாடையுட சி;த்துகேளு
நலமான நெய்யுடனே ஆவின்நெய்யும்
        நற்புழுகு சவ்வாதுடனே ரசனை சேர்த்து
குலமான குருவிட்டு மத்தித் தேதான்
        கூர்மையுடன் ரவியில் வைத்தால் வாடை வேகும்
பிலமாக அவனவ னினைத்தபடி வாசம்
        பிசகாது வாசிக்கு மின்னம் கேளே.

பொருள்

வெள்ளைப் புலியின் நெய், பசுவின் நெய் , புனுகு, சவாது, கோரோசனை, இவற்றோடு குருவைச் சேர்த்து மத்தித்து வெய்யிலில் வைக்க மணக்கும். யார் என்ன வாசனை நினைக்கிறார்களோ அந்த வாசனை வீசும்.

## நனையாத சித்து

இன்னமுநான் சொல்லுகிறேன் சித்துவித்தை
        இதமாக வாடையுட சித்து சொன்னேன்
மன்னவனே நனையாத சித்து தன்னை
        வழுத்துமெனப் புலத்தியனே வளமாயக்கேளு
நன்னயமாய் வெண்புலிநெய் தன்னோடொக்க
        நல்லதொரு ஐங்கோலம் கூடச்சேர்த்து
தன்னயமாய் மேனியெல்லாம் தடவியப்பா
        தயவாக விளையாடும் சார்புகேளே.

கேளப்பா தண்ணிரில் மூழ்கி நல்ல
        கெற்சிதமாயக் கரையேறி நின்றுபாரு
நீளப்பா மேனிதனி லொட்டா தப்பா
        நிச்சயமாய் நனையாதான் போலே காணும்
சேலப்பா இன்னமொரு சேதிகேளு
        திறமாக மழையிலே நடந்தாயானால்
தூளப்பா போலவுநீர் சிதறி அப்பால்
        தோயாது மேனிதனில் தண்ணீர்தானே

பொருள்

வெள்ளைப் புலியின் நெய்யோடு சம அளவு ஐங்கோலத் தைலம் சேர்த்து மத்தித்து உடலில் தடவிக்கொண்டு நீரில் மூழ்கினாலும் , மலையில் நனைந்தாலும் நீர் உடலில் படாது.

## வாயுவுள் தம்பனச்சித்து

தானெ;னற இத்தொழிலை உலகத்தொர்கள்
        தயவாகக் கண்டு அதிசயிப்பார் பாரு
கோனென்ற புலத்தியனே நனையாச்சித்து
        கூர்மையுடன் சொன்னே னான் இன்னம்கேளு
வானென்ற வாயு ஸ்தம்பன சித்துகேளு
        மார்க்கமுடன் சொல்லுகிறேன் மைந்தா மைந்தா
வீனென்ற வெளியரங்கம் ப்ணணாதையா
        வேதமய மாயதொரு சித்துதானே.

தானென்ற நாயுருவி வித்து தன்னை
        தன்மையினால் முலைப்பாலில் உரைத்து மைந்தா
பானென்ற பசும்பாலில் கரைத்துக்கொண்டு
        பாங்கான எட்டிவிரை உரைத்துக் கொண்டு
தேனென்றே தியானித்துக் கொண்டாயாகில்
        செவ்வியாய் வயிறுபசி எடுப்பதில்லை
நானென்று எத்தனைநாள் இருந்தாலுந்தான்
        நளினமுடன் பசியாது மைந்தா பாரே

பாரப்பா பசியெழுப்ப வேண்டுமென்றால்
        பண்டாகச் சொல்லுகிறென் மைந்தாகேளு
வீரப்பா எழுப்பியதோர் மஞ்சளிஞ்சி
        விரும்பியெ தின்றிடவே வேகம் கொண்டு
காரப்பா மூல அக்கினியே நீறும்
        கடும்பசிதா னெடுக்கமடா கருபார்த்தால்
சித்துவித்தை யனேகமுண்டு தெளிந்து காணே

பொருள்

நாயுருவி விதை எடுத்து முலைப்பால்விட்டு அரைத்து பசும்பாலில் கரைத்து எட்டி விதையை அரைத்து உண்ண பசி எடுக்காது பசிக்க வேண்டுமானால் மஞ்சள் இஞ்சி தின்னவேண்டும்.

## வினோத வித்தைச் சித்து

காணப்பா வாயுஸ்தம்பன சித்துச் சொன்னேன்
கருவான வினோதவித்தைச்சித்துகேளு
ப+ணப்பா பொரிக்காரக் கட்டி வாங்கி
பொங்காமல் தான் பொரித்து எடுத்துக்கொண்டு
ஊணப்பா சூரியனா லண்டம் போல் சீவி
உண்மையடன் தானெடுத்து கெற்சிதமே பண்ணி
தானப்பா மோடிதான் முட்டையைதான் வைக்க
தயங்காமல் எடுத்துப்பா றென்று சொல்லே

சொல்லியதோர் மணல்குவித்து அதன்மேல்முட்டை
தோணவே வைத்துநீ புவைசாத்தி
அள்ளியே தண்ணீரை அதன்மே லூற்றி
அடங்கியே கரைந்திடுந்தான் முட்டையப்பா
சொல்லியெதி ராளியைப்போ யெடுக்கச் சொல்லு
துடிதுடித்து ஓடியவன் பார்த்து ஏங்கி
புல்லியே நாணமுற்று மன்பின் பார்த்து
பேர்ககறியான் மனந்தளர்ந்து ஏங்குவானே

ஏங்கிமிக நிற்கையிலே நீதான் சென்று
இயல்பான முட்டையை அடக்கம் பண்ணி
ஆங்கிக் கொண்டே எழும்பி அந்தஸ்தான
மன்பாய்நீ போய்நின்று அடக்கஞ் செய்ய
தீங்கில்லா முட்டையைத் தானெடுத்துக்காட்டி
திறமாக நின்று அட்டகாசம் பண்ணி
பாங்காக ராசனிடம் சென்றால் மைந்தா
பாரிலுள்ளோ ரதிசயிப்பார் பரிந்துகாரே.

பொருள்

பெரியகாரத்தை பொறித்து பின்னர் முட்டை போல செதுக்கி மணலை அதன் மீள் குவித்து அதன் மீது கொஞ்சம் நீர் தெளித்து பின் எதிராளியை எடுக்கச்சொன்னால் அவன் எடுக்க முயலும் பொது அது கரையும் நீ மணலுக்குள் முன்னரே ஒளித்துவைத்த முட்டையை எடுத்துக்காட்ட பார்ப்பவர்கள் வியப்பார்.

## இக்கோலச்சித்து

காரப்பா வினோதமயச் சித்துச் சொன்னேன்
கலங்காமல் இக்கோலச்சித்துகேளு
பாரப்பா கூடுகட்டித்தூங்கும் சிட்டு
        பண்பாகப்பெண்சிட்டுப் பிடித்துவந்து
சீரப்பா மஞ்சள்நிற சிட்டைத்தானும்
        செம்மையுள அடக்கமாய்ச்செய்துகொண்டு
கூரப்பா எலுமிச்சம்பழத்தைக் கட்டி
        கூடையிலே வைக்கிறே னெடுத்துப்பாரே

பாரென்று கூடையை நீ கவிழ்த்து முன்னே
        பழத்தை முன்னே அடக்கம் பண்ணி சிட்டைவைத்து
காரென்று தேவியைநீ தொழுதுபோற்றி
        கடக்கப்போய் நி;ன்றவனை எடுக்கச்சொல்லி
ஏரென்று பழம் ஓடிப்போவென்றேதான்
        எல்லோரு மேயறியச் சொல்லுமுன்னே
நேரென்று ஓடியவன் பெட்டியைத்தான் திறப்பான்
        நின்ற சிட்டு பறந்தோடி மயங்குவாளே.

வானென்ற பழம்பறந்து போகுமுன்னே
        மக்களே அழைக்கிறேன் பாரென்று சொல்லி
தானென்று சபைசுற்றி யோடிவந்து
        தப்பாமல் பாரென்று பழத்தைக்காட்டி
தானென்ற சபைஎதி சயமாயப் பார்ப்பார்
        சிவசிவா பிரட்டான விந்தையப்பா
மானென்ற இக்கோலச்சித்து சொன்னேன்
        மகத்தான அரவினுட சித்துகேளு

பொருள்

தூக்கணாம் குருவியின் பெண் சிட்டைப் பிடித்து கூடையிலிட்டு கவிழ்த்து மூடிய பின் எலுமிச்சம் பழத்தை பலரும் காண உள்ளே வைத்து மூடிய பின் யாரேனும் ஒருவரை எலுமிச்சம் பழத்தை எடுக்க சொன்னால் அவர்கள் கூடையை திறந்தவுடன் குருவி பறக்கும். அதைக் கண்டு பலரும் வியப்பார்.

மீண்டும் பழத்தைக் கொண்டுவருவதாக சொல்லி கூடையில் இருக்கும் பழத்தை எடுத்து காட்டு.

## அரவின் சித்து

கேளடா கீரியுட பித்து வாங்கி
        கிருபையுள்ள ஐங்கோலங் கூடச்சேர்த்து
மாளடா மத்தித்துச் சிமிழில் வைத்து
        மக்களே புற்றருகே நின்று கொண்டு
வேளடா யெரித்த மையைப் புற்றில் தேய்த்து
        விசையாக நீ இருக்க அரவஞ்சீறி
வாளடா போலவே அரவம் நின்று
        மதிமயங்கி அலகுகட்டி ஆடுந்தானே.

தானென்ற அரவரத்தைக் கையால் பற்றி
        தான்பிடித்து ராசரிடம் சதிராயாடி
தேனென்ற முத்தமிட்டு அமுத மீந்து
        சிறப்பாக ஆடவைத்தால் ராசனப்போ
கோனென்ற சித்தனவ னாகுமென்று
        குணமாக வெகுவரிசை கொடுப்பானப்பா
ஊனென்ற மறப்பு மையைத் திலகம் போட்டு
        உண்மையுடன் மறைந்துவிடு மைந்தா பாரே.

பொருள்

கீரியின் பிச்சு எடுத்து ஐங்கோலம் சேர்த்து மத்தித்து சிமிழில் பதனம் செய்து பின்னர் அதில் கொஞ்சம் கையில் தேய்த்து கொண்டு புற்றருகே நிற்க உள்ளே இருக்கும் அரவம் சீறிக்கொண்டு வெளியே வந்து ஆடும். அதனை கையில் பிடித்து வந்து பால் கொடுக்க காண்பவர் அதிசயிப்பர்.

## மதிமயக்கும் சித்து

பாரப்பா மறைந்த உடன் சபையோரெல்லாம்
 பாங்கான அதிசயந்தா னெ;று சொல்வார்
ஆரப்பா அறிவார்கள் சித்து மார்க்கம்
 அதிசயித்து எவராலே அறியப்போமொ
சீரப்பா அரவினுட சித்துச்சொன்னேன்
 செகச்சால மதிமயக்கும் சி;ததுக்கேளு
வாரப்பா முற்றினதோர் தேங்காய் வாங்கி
 வயணமதாய் தானுடைத்து மைந்தா கேளு

கேளப்பா ஒருமூடி திருவிக்கொண்டு
 கெட்டியா யெரி பிடித்துச் சொல்லக்கேளு
நாளப்பா தினம் பார்த்து மூடிக்குள்ளெலியை
 நன்றாக வைத்துமறு மூடி நன்றாய்ப்பொருத்தி
சேலப்பா உடைத்தவாய் தெரியாமல்தான்
 திறமாக வச்சிரத்தின் பசையை யூட்டி
சாலப்பா மஞ்சள்தனை அதன்மேல் பூசி
 சமத்தாகக் காயவைத்து சாலம்பண்ணே.

சாலமென்ன சபைகூடி நடுவே நின்று
 தயவாகத் தேங்காயைக் கையிலேந்தி
கோலமெனன் கூகூ தேங்காயைப் பாரு
 கூட்டமிட்டால் ஓடிவெகுச் சுத்தாய் சுத்தும்
ஓலமென்றே தான் கூவி தேங்காயை வைத்து
 ஓடிவிளை யாடெனவே உகந்து சொல்லி
தாலமென்றே நிற்கையிலே தேங்காய்க்குள்ளே
 தானருந்து எலிபிரண்ட தாபத்தாலே

தாபமென்ற தேங்காய்தான் உருண்டதாலே
        சபையில் நின்ற மூடர்கள் தானதிசயமாய்ப்பார்த்து
ரூபமென்ற தேங்காய்தான் மந்திரத்தின் விசையால்
        நொடிக்கு முன்னே வெகுசுத்தாய் சுத்துதப்பா
கோபமென்ற கொடுமையில்லாப் புலத்தியனே அய்யா
        கூறுகெட்ட எலி இருந்த கூறுகாணார்
லாபமென்ற லாபம்வெகு நிதிகள் சேரும்
        ராசச்pயத்தோ ரதிசயிப்பார் நன்றாம்பாரே.

<u>பொருள்</u>

முறிய தேங்காயை வாங்கி உடைத்து ஒரு முடியைத் திருவி எலியொன்றைப் பிடித்து உள்ளே வைத்து மறு மூடியை மூடி உடைத்தது தெரியாவண்ணம் வச்சிரத்தை பூசி அதன் மேல் மஞ்சள் பூசி காயவைத்து சபையின் முன் வைக்க அது உருண்டோடும்.

## முத்திதுதிரும் சித்து

பாரப்பா மதியகத்தும் சித்து சொன்னேன்
பண்பான முத்து திரும் சித்துகேளு
காரப்பா குண்டுமணி பருப்பினோடே
கருவான எட்டியுட வித்தும் சேர்த்து
சாரப்பா மதனப்பூ அபின் கஞ்சாவும்
சமனாக அஞ்சதுவு மொன்றாய்ச் சேர்த்து
வீரப்பா செய்யாமல் ஐங்கோலத்தால்
வீறடங்க மைபோல ஆட்டிவாங்கே.

வாங்கப்பா கருப்பட்டி நாலுக்கென்று
மைந்தனே கரைத்ததையும் பாகுசெய்து
சாங்கமா யரைத்ததொரு மருந்தைப் பாகில்
சமரசமாய்க் கரைத்ததையும் அடுப்பில் வைத்து
பாங்காகக் கிண்டிவரில் மெழுகுபோல
பக்குவமாய் தானெடுத்துப் பதனம் பண்ணி
தீங்கில்லா மெழுகதனில் பண்வொடைதான் கொண்டால்
சிறப்பாக சிரித்தவனு மகிழுவானே

பொருள்

குன்றி மணிப் பருப்புடன் எட்டி விதையும் சேர்த்து மதன காமப்பூ, அபின் , கஞ்சா, ஆகிய ஐந்தும் சமனாக சேர்த்து ஐங்கோலத் தைலத்தால் மைபோல ஆட்டி, கருப்பட்டி நாலுக்கு ஒன்று என்ற வீதம் சேர்த்து காய்ச்ச மெழுகு போல வரும் இதில் பணவெடை உட்கொள்ள சிரித்து மகிழ்வார்கள்.

## தீயெரியும் சித்து

வானப்பா கெற்சிதங்க ளிட்டாப்போலே
        வலுவாகச் சிரிக்கையிலே வாய் நீராடும்
தேனப்பா வென்றவனும் வாயைச் சப்பி
        திகையாமல் சிரித்திடுவான் அப்பா சொன்னேன்
தானப்பா முத்துதிரும் சித்து சொன்னேன்
        தன்மையுடன் தீயெரியும் சித்துகேளு
தோனப்பா சொல்லுகிறேன் புலத்தியனே அய்யா
        தொடுமுன்னே தீயnரிய வகையைக்கேளே

வகையான கெந்தகமும் சூடன் கூட்டி
        மகத்தான தீமுறுகல் பாடாணம் சேர்த்து
தகையாமல் மூன்று மொன்றாயப் பொடித்துக்கொண்டு
        சமத்தாகப் பீங்கானில் பதனம் பண்ணி
பகையான பஞ்சுகளை குவித்துக்கொண்டு
        பஞ்சதனி லேபொடியைப் பணம்போல்தூவ
புகையான புகையெழும்பு மப்பா சொன்னேன்
        புகழிலவம் பஞ்சில் பொறி யெரியும் தானே.

பொருள்

கேந்தகமும், சூடனும் சேர்த்து தீமுருகள் பாஷாணமும் சேர்த்து பொடியாக்கி பீங்கானில் சேமித்து பஞ்சில் அந்தப் பொடியைத் தூவ புகைந்து தீப்பற்றும்.

## தீயவியும் சித்து

தானெ;னற தீயெரியும் சித்துச்சொன்னேன்
        தன்மையடன் தீயவியும் சி;த்துகேளு
கோனென்ற தீயெரியும் போதுமைந்தா
        குறியாகப் பூரணத்தைக் குவிந்து பார்த்து
நானெ;னற அகம்போக்கி நீதானென்று
        நன்மையுடன் தொழுதுசிலம் வாவென்றே தான்
மோனென்ற மோனமடன் செபிக்கும் போதில்
        மூர்க்கமதாய் மேகசலம் பொழியும்தானே

தானவனாய் நின்றதீ யெரியும்போது
        தசையடங்க மேகசலம் மதியில் சென்று
காணவனு வான தீ யெங்கேயென்று
        கனகசபை அனைவோரும் போற்றுவார்கள்
தோணவலு வானதொரு இந்தவித்தை
        சுத்தருக்கு எய்துமடா ரூபம் சித்து
பூணவரி தானதொரு சித்துச்சொன்னேன்
        புதுமையுடன் வழிநடக்கும் சித்துகேளே.

பொருள்

தீ எரியும் பொது பூரணத்தைக் குவிந்து பார்த்து தான் என்னும் அகம்பாவம் போக்கி நீயே எனத் தொழுது மழையே வா, என்று சொல்ல மழை பெய்யும் பார்ப்பவர் அதிசயிப்பர்.

## வழிநடக்கும் சித்து

சித்தென்ற சந்தனமும் பரம்கூட்டி
சீக்கிரத்தில முதம்விட்டு புனுகும்
முத்தான நீரதனில் கரைத்துக் கொண்டு
மூர்க்கமுள்ள கல்லுப்பை அரைத்து மைந்தா
வித்தார மாகவே நீ காலில் பூசி
விசையாக நடக்குதற்கு தகையோயில்லை
மத்தான விரையுரைத்து நாவில் திற்றி
மார்க்கமுடன் அமுதம் கொள் வகையைக்கேளே.

பொருள்

சந்தனம், பச்சைக் கற்பூரம், தாய்ப்பால், புனுகு, இவை பனி நீரில் சேர்த்து கரைத்து கல்லுப்பும் கரைத்து காலில் பூசி ஊமத்தை விதையாய் அரைத்து நாவில் பூசிக் கொண்டு நீண்ட தூரம் நடக்கலாம் வலி தோன்றாது.

## அடக்குமதிச்சித்து

வகையென்ன நொடிக்குமுன்னே அண்டம்சுற்றி
மார்க்கமுட னிருப்பிடத்தில் காணலாகும்
தகையில்லா வழிநடக்கும் சித்துசொன்னேன்
தன்மையுடன் அடக்குமதிச் சித்துகேளு
நகையாமல் வளியை நீ அடக்கம் பண்ணி
நல்லோரைத் தான் பணிந்து நன்மையாகப்
பகையில்லாப் பூரணத்தைச் செபித்துக் கொண்டு
பருதிமதிச் சுடரொளியைப் பற்றுபற்றே.

பற்றுவது பூரணத்தைப் பற்றினாக்கால்
பார்க்கிறதோர் சித்துவித்தை எல்லாம் தன்னுள்
முற்றுமதை பேசவா யெடுக்கா தப்பா
சிற்றுவித்தை சகலமும் நீ ஆடும் போதில்
சிவசிவா பூரணமே யென்று போற்று
சுற்றுமுள்ள மனதானதால் எல்லாம் சித்து
தொடுகுறியி லாத்மாவைத் தொண்டு பண்ணே

பொருள்

கும்பித்து பூரணத்தை மனதில் நிலை நிறுத்த மனமானது அடங்கும்.

**இத்துடன் அகத்தியர் அருளிய அறுபத்திநாலு சித்துக்கள் முற்றிற்று.**